# சான்றோர் குரல்

SAANDROR KURAL - Tamil Monthly

மக்களுக்கான குரல்

தமிழ் மாத இதழ்

● குரல் – 5 ● இதழ் – 8 ● அக்டோபர், 2025 ● தமிழ் மாத இதழ் ● விலை ரூ.25/–

● Volume - 5 ● Issue - 8 ● October, 2025 ● Monthly ● Price Rs. 25/-




## தவெக கொடிக்கு எதிரான மேல் முறையீட்டு வழக்கில்

# விஜய் பதிலளிக்க உத்தரவு





# திமுக கூட்டணிக் கட்சிகளை எடப்பாடியார் ‘இடிக்கும்’ ரகசியம்?







## ‘சி.எம். சார்’ என் மீது கை வையுங்கள்

# தொண்டர்களை விட்டுவிடுங்கள்

வீடியோ வெளியிட்டு நடிகர் விஜய் ஆவேசம்

### தவெக கொடிக்கு எதிரான மேல் முறையீட்டு வழக்கில்

# விஜய் பதிலளிக்க உத்தரவு

**சென்னை:** தவெக கொடியை எதிர்த்து தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கில் தவெக தலைவர் விஜய் 6 வாரங்களில் பதில் அளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிவப்பு, மஞ்சள், சிவப்பு வண்ணத்தில் உள்ள தமிழக வெற்றிக் கழகத்தின் கொடி தங்களுடைய வணிகச்சின்னம் போல் உள்ளதாகவும், அந்தக் கொடியைப் பயன்படுத்த தவெகவுக்கு தடை விதிக்கக் கோரியும் தொண்டை மண்டல சான்றோர் தர்ம பரிபாலன சபையின் தலைவர் பச்சையப்பன், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

அந்த வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற தனி நீதிபதி, சிவப்பு, மஞ்சள், சிவப்பு நிறத்தில் கொடியைப் பயன்படுத்த தவெகவுக்கு தடை விதிக்க முடியாது என மறுப்பு தெரிவித்து வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். தனி நீதிபதியின் இந்த உத்தரவை எதிர்த்து பச்சையப்பன், உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள், ஜி.ஜெயச்சந்திரன், எம்.சுதீர்குமார் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ரமேஷ் கணபதி ஆஜராகி வாதிட்டார். அதையடுத்து இந்த வழக்கில், தவெக தலைவர் விஜய், 6 வார காலத்தில் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை நீதிபதிகள் தள்ளிவைத்தனர்.








# சான்றோர் குரல்

SAANDROR KURAL - TAMIL MONTHLY தமிழ் மாத இதழ்

● குரல் - 5 ● இதழ் - 8 ● அக்டோபர், 2025, 2025 ●தமிழ் மாத இதழ் ●விலை ரூ.25/-

●Volume-5 ●Issue-8 ●October, 2025 ●Monthly ●Price Rs. 25/-



நிறுவனர் / ஆசிரியர் / வெளியீட்டாளர்

G.B. பச்சையப்பன்

ஆலோசகர்கள்

நிதில் & கோ S.R.P. ராஜன்

பயில்வான் ரங்கநாதன்

R. கதிரவன்

மூத்த செய்தியாளர், பாலிமர் தொலைக்காட்சி.

நிர்வாக ஆசிரியர்கள்

R. பிரேம் சந்தர்

S.R. ரஞ்சித்

செய்தி வாசிப்பாளர், பாலிமர் தொலைக்காட்சி.

உதவி ஆசிரியர்கள்

R. ரிச்சர்ட் ராஜ்

K. முகமது அலி

S. சதீஷ்குமார்

K. குட்டி கிருஷ்ணன்

L. லிங்கேஷ்வரன்

G.K. பாண்டியநேரு (தேனி)

குரு பாண்டியன் (திண்டுக்கல்)

நிருபர்கள்

V. நரேஷ்குமார் (செங்கல்பட்டு)

G. ராஜ்குமார் (விருதுநகர்)

P. ஆகாஷ் (சென்னை)

M. ஆகாஷ்குமார் (திருவண்ணாமலை)

S. ஸ்ரீனிவாசன் (காஞ்சிபுரம்)

K. தினேஷ் (மத்திய சென்னை)

M. தினேஷ் (திருப்பூர்)

லட்சுமணன் (திண்டுக்கல்)

புகைப்பட கலைஞர்கள்

எ. சங்கர்

VRJ Graphics பக்க வடிவமைப்பு:

90941 19636

நிர்வாக மேற்பார்வையாளர்கள்

P.அஜய் B.Com., - P.ஆகாஷ் B.Com.,

சட்ட ஆலோசகர்கள்

E. யோபு M.Com., LLB, சென்னை உயர்நீதிமன்றம் (99417 56241)

D. நவீன் சந்தர் B.Sc.,BL, சென்னை உயர்நீதிமன்றம் (98942 30312)

D.K. பார்த்திபன் B.E., LLB, சென்னை உயர்நீதிமன்றம் (99411 33979)

பதிவு அலுவலகம் :

நெ.E-44, ராஜா முத்தையாபுரம்,

ராஜா அண்ணாமலைபுரம், மந்தைவெளி, சென்னை - 028

நிர்வாக அலுவலகம்:

நெ.22/2, சி.பி.கோயில் தெரு, கச்சேரி ரோடு,

மயிலாப்பூர், சென்னை - 600004

தொடர்பு எண்: 044 - 48588401 / 9962235025

அனைத்து சட்ட விதிகளும்/ உரிமைகளும் சென்னை நீதிமன்றத்திற்குட்பட்டது.


## ஆசிரியர் கடிதம்...

# கல்வியை கற்று வாழ்க்கையில் முன்னேற வேண்டும்



வடசென்னை பகுதியில் பெரம்பூர் பேப்பர் மில்ஸ் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சிஎம்டிஏ சார்பில் முரசொலி மாறன் பூங்காவை ரூ.8.20 கோடி மதிப்பில் மறுசீரமைக்கும் பணி மற்றும் கொளத்தூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.13 கோடியே 95 லட்சத்து 20 ஆயிரம் மதிப்பிலான புதிய திட்டப் பணிகளுக்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார்.

மேலும், கொளத்தூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மாநகராட்சி சார்பில் ரூ. 8 கோடியே 65 லட்சத்து 80 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள இரண்டு பள்ளிக் கட்டிடங்கள், மேம்படுத்தப்பட்ட கால்பந்து மைதானம் மற்றும் விளையாட்டுத் திடலை திறந்து வைத்தார்.

அப்போது, மாணவர்கள் மத்தியில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: இந்த அகாடமியில் நீங்கள் பெற்றிருக்கும் பயிற்சி, ஒரு சிறிய தொடக்கம் தான். இன்று இணையம் முழுவதும் அறிவுத் தகவல்கள் கொட்டிக்கிடக்கிறது. நல்ல பயனுள்ள தகவல்களை பார்த்து உங்கள் திறமையை மேலும், மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டும். கல்விக்கு இடைஞ்சல் ஏற்படுத்த, கல்வியினால் பெறப்படும் அறிவைக் கொச்சைப்படுத்த பலர் செயல்படுகின்றனர்.

அவர்களின் எண்ணம், நீங்கள் முன்னேற வேண்டும் என்பது கிடையாது. கவர்ச்சியான சொற்களைச் சொல்லி பின்னுக்கு இழுத்துக்கொண்டு செல்லும் ஒரு சூழ்நிலையை சிலர் ஏற்படுத்துகின்றனர். எதிர்காலத்துக்கு என்ன தேவையோ, அதை நோக்கி நீங்கள் நடைபோட வேண்டும். தமிழக மாணவர்களின் படிப்புக்கு திராவிட மாடல் அரசு இருக்கிறது.குறிப்பாக நான் இருக்கிறேன். தமிழகத்தின் வளர்ச்சிக்கு அடித்தளம் கல்வியாகும். அதை நீங்கள் நல்ல முறையில் கற்று, வாழ்க்கையில் முன்னேற்றம் காண வேண்டும்.

இவ்வாறு முதல்வர் பேசினார்.

மாணவர்களின் எதிர்காலத்துக்கு என்ன தேவையோ மற்றும் மாணவர்களின் படிப்புக்கு, தமிழகத்தின் வளர்ச்சிக்கு அடித்தளம் கல்வியாகும். அதை நீங்கள் நல்ல முறையில் கற்று, வாழ்க்கையில் முன்னேற்றம் காண வேண்டும். மாணவர்களின் எதிர்கால முன்னேற்றத்திற்கு கல்வி வழிவகுக்கும் என்பதினை வரவேற்கிற்கும் விதமாக சான்றோர் குரல் மாத இதழின் சார்பாக ஆசிரியர் ஜி.பி. பச்சையப்பன் வாழ்த்துக்களை தெரிவித்தார். ●



G.B.பச்சையப்பன்

தலைமை ஆசிரியர்



# சுதேசி பொருட்களை மட்டுமே வாங்க வேண்டும்

## மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி அறிவுரை

வரும் பண்டிகை காலத்தில் சுதேசி பொருட்களை மட்டுமே வாங்க வேண்டும் என்று பிரதமர் மோடி அறிவுறுத்தி உள்ளார். 126வது மனதின் குரல் வானொலி நிகழ்ச்சி நேற்று ஒலிபரப்பானது.

இதில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது: தீபாவளிக்கு பிறகு சத் பண்டிகை கொண்டாடப்பட உள்ளது. மத்திய அரசின் முயற்சியால் கொல்கத்தாவின் துர்கா பூஜை யுனெஸ்கோவின் கலாச்சார பட்டியலில் சேர்க்கப்பட்டது. இதேபோல சத் பூஜையையும் யுனெஸ்கோ பட்டியலில் சேர்க்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அக்டோபர் 2ம் தேதி காந்தி ஜெயந்தியை கொண்டாட உள்ளோம். நமது தேசத்தந்தை சுதேசி கொள்கையை வலியுறுத்தினார். அவற்றில் காதி மிகவும் முக்கியமானது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, சுதந்திரத்துக்குப் பிறகு காதி மீதான ஆர்வம் குறைந்தது. மத்திய அரசின் முயற்சிகளால் கடந்த 11 ஆண்டுகளாக காதி பொருட்களின் விற்பனை அதிகரித்து வருகிறது. வரும் காந்தி ஜெயந்தி நாளில் குறைந்தபட்சம் ஒரு காதி பொருளை வாங்க வேண்டுகிறேன்.

இதற்கு தமிழ்நாட்டை சேர்ந்த யாழ் நேச்சுரல்ஸ் ஓர் உதாரணம் ஆகும். அந்த நிறுவன உரிமையாளர்கள் அசோக் ஜெகதீசன், பிரேம் செல்வராஜ் ஆகியோர் கார்ப்பரேட் வேலையை துறந்து புதிய முயற்சியை மேற்கொண்டனர். புற்கள் மற்றும் வாழை நார்களிலிருந்து யோகா பாய்களை அவர்கள் உருவாக்கினர். மூலிகை சாயங்களால் துணிகளுக்கு சாயம் பூசினர். இந்த புதிய முயற்சி மூலம் சுமார் 200 குடும்பங்களுக்கு அவர்கள் வேலைவாய்ப்பை வழங்கி உள்ளனர்.

ஆர்எஸ்எஸ் அமைப்புக்கு புகழாரம்: அடுத்த சில நாட்களில் விஜயதசமியை கொண்டாட உள்ளோம். இந்த நாளில் ஆர்எஸ்எஸ் அமைப்பு 100வது ஆண்டு விழாவை கொண்டாடுகிறது. பல நூற்றாண்டுகளாக இந்தியா அடிமைத்தனத்தில் சிக்கித் தவித்தது. இந்த சூழலில் டாக்டர் ஹெட்கேவர் கடந்த 1925ம் ஆண்டு விஜயதசமி நாளில் ராஷ்ட்ரிய சுயம்சேவக் சங்கத்தை நிறுவினார்.

அவரது மறைவுக்கு பிறகு பரம் பூஜ்ய குருஜி தேசத்துக்கு சேவை செய்யும் மகத்தான பணியை முன்னெடுத்து சென்றார். கடந்த 100 ஆண்டுகளாக ஆர்எஸ்எஸ் அமைப்பு இடைவிடாமல் தேச சேவையில் ஈடுபட்டு வருகிறது. ஆர்எஸ்எஸ் அமைப்புக்கும் அதன் தொண்டர்களுக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரும் பண்டிகை காலத்தில் சுதேசி பொருட்களை மட்டுமே வாங்க வேண்டும். உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை மட்டுமே வாங்குவேன் என்று ஒவ்வொரு இந்தியரும் உறுதியேற்க வேண்டும். நமது பாதை சுதேசி பாதையாக இருக்க வேண்டும். அனைத்து துறைகளிலும் நாம் சுயசார்பை எட்ட வேண்டும். பண்டிகை நாளில் நமது வீடுகளை சுத்தம் செய்கிறோம். அதே நேரம் நமது தெருக்கள், சுற்றுப்




புறங்கள், சந்தைகள், கிராமங்கள், நகரங்களையும் சுத்தம் செய்ய வேண்டும். இது நமது தலையாய கடமை ஆகும். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்

**கடற்படை அதிகாரிகளுடன் உரையாடல்:**

மனதின் குரல் நிகழ்ச்சியின் போது பிரதமர் மோடி கூறும் போது, "கடலில் சுமார் 50,000 கி.மீ. பயணம் செய்து கடற்படை பெண் அதிகாரிகள் தில்னா, ரூபா சாதனை படைத்துள்ளனர். அவர்கள் தங்களது சாகச பயண அனுபவங்களை நம்மோடு பகிர்ந்து கொள்வார்கள்'' என்றார். புதுச்சேரியை சேர்ந்த ரூபாவுடன் பிரதமர் பேசிய போது தமிழில் வணக்கம் கூறினார். இதைத் தொடர்ந்து லெப்டினென்ட் கமாண்டர் ரூபா அழகிரிசாமி கூறியதாவது:



ரூபா அழகிரிசாமி, தில்னா.

கடந்த 2017ம் ஆண்டு கடற்படையில் சேர்ந்தேன். எனது தந்தை தமிழ்நாட்டை சேர்ந்தவர். அம்மா புதுச்சேரியை சேர்ந்தவர். விமானப் படையில் தந்தை பணியாற்றினார். அவரை பின்பற்றி நான் கடற்படையில் இணைந்தேன். பாய்மர படகில் இருவர் மட்டுமே பயணம் செய்தோம். 3 புயல்களை எதிர்கொண்டோம்.

சில நேரங்களில் 3 மாடி உயரத்துக்கு அலைகள் எழுந்தன. அந்த அலைகளை எதிர்கொண்டோம். உறையவைக்கும் குளிர், கடுமையான வெப்பம், சூறாவளி காற்றை சமாளித்தோம். அண்டார்டிகாவில் பயணம் செய்த போது அங்கு வெப்பநிலை ஒரு டிகிரி செல்சியஸாக இருந்தது. அண்டார்டிகா குளிரை சமாளிக்க 7 அடுக்கு ஆடைகளை அணிந்தோம். இவ்வாறு ரூபா அழகிரிசாமி தெரிவித்தார்.

கடற்படை லெப்டினென்ட் கமாண்டர் தில்னா கூறியதாவது: கடந்த 2014ம் ஆண்டில் கடற்படையில் சேர்ந்தேன். நான் கேரளாவின் கோழிக்கோட்டை சேர்ந்தவள். எனது தந்தை ராணுவத்தில் பணியாற்றினார். எனது அம்மா இல்லத்தரசி. எனது கணவர் இந்திய கடற்படையில் பணியாற்றுகிறார்.

கடந்த 2024 ம் ஆண்டு அக்டோபர் 2ம் தேதி கோவாவில் இருந்து கடல் பயணத்தை தொடங்கி கடந்த மே 29ம் தேதி கரைக்கு திரும்பினோம். 238 நாட்கள் சுமார் 50,000 கி.மீ. கடலில் பயணம் செய்தோம். பாயிண்ட் நீமோவில் தேசிய கொடியை ஏற்றி சாதனை படைத்தோம். பாய்மரப் படகில் அங்கு சென்ற முதல் இந்தியர், முதல் ஆசியர் என்ற பெருமையை பெற்றோம். இவ்வாறு தில்னா பேசினார். ●

"லடாக்கில் ஏற்பட்ட வன்முறை, 4 பேர் உயிரிழப்புக்கு மத்தியில் ஆளும் பாஜக.வும், ஆர்எஸ்எஸ் அமைப்பும்தான் காரணம்'' என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார். காஷ்மீரில் இருந்து பிரித்து தனி யூனியன் பிரதேசமாக லடாக் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் மாநில அந்தஸ்து வழங்க கோரி சமூக ஆர்வலர் சோனம் வாங்சுக் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்.

கடந்த வாரம் அங்கு இளைஞர்கள் திடீரென போராட்டத்தில் ஈடுபட்டனர். அது கலவரமாக மாறியதில் 4 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து வாங்சுக் உண்ணாவிரதத்தை வாபஸ் பெற்று, வன்முறைக்கு கண்டனம் தெரிவித்துள்ளார். அதன்பின், வாங்சுக் நடத்தி வரும் என்ஜிஓ அமைப்புக்கு சட்டவிரோதமாக வெளிநாட்டில் இருந்து பணம் வந்தது, அவர் பாகிஸ்தான் சென்று வந்தது குறித்து சிபிஐ விசாரணை தொடங்கியது. மேலும், கடந்த வெள்ளிக்கிழமை வாங்சுக்கை போலீஸார் கைது செய்தனர்.

இந்நிலையில், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தனது எக்ஸ் வலைதளப் பக்கத்தில் நேற்று வெளியிட்ட பதிவில் கூறியதாவது: லடாக்கில் ஏற்பட்ட வன்முறைக்கு மத்தியில் ஆளும் பாஜக.வுக்கும் அதன் கொள்கை வழிகாட்டியாக உள்ள ஆர்எஸ்எஸ் அமைப்பும்தான் காரணம். லடாக் மக்கள் தங்கள் உரிமைகளுக்கு குரல் கொடுத்தனர். ஆனால், 4 பேர் உயிரை பறித்து பதில் அளித்துள்ளது பாஜக. அத்துடன் வாங்சுக்கை சிறையில் அடைத்துள்ளது.

லடாக் மக்கள் மிகச் சிறந்தவர்கள். அவர்களுடைய கலாச்சாரம், பண்பாட்டின் மீது பாஜக.வும் ஆர்எஸ்எஸ் அமைப்பும் தாக்குதல் நடத்தி வருகிறது. லடாக் மக்களுக்கு உரிமைகளை கொடுக்க வேண்டும். அங்கு வன்முறையை நிறுத்த வேண்டும். அவர்களுக்கு மாநில அந்தஸ்து உரிமையை வழங்க வேண்டும். இவ்வாறு ராகுல் காந்தி கூறியுள்ளார்.

# லடாக் மக்கள், கலாச்சாரம் மீது தாக்குதல்

## பாஜக, ஆர்எஸ்எஸ் மீது எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் புகார்



## ராகுலுக்கு கொலை மிரட்டல்


ராகுல் காந்திக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக காங்கிரஸ் கட்சி குற்றம்சாட்டியுள்ளது. இதையடுத்து, பாஜகவுக்கு காங்கிரஸ் 3 முக்கிய கேள்விகளை எழுப்பியுள்ளது.

இதுகுறித்து காங்கிரஸ் கட்சி எக்ஸ் தளத்தில் கூறியுள்ளதாவது: தொலைக்காட்சி விவாதத்தின்போது பாஜகவைச் சேர்ந்த பிந்து மகாதேவ், ராகுல் காந்திக்கு வெளிப்படையாக கொலை மிரட்டல் விடுத்துள்ளார். முதலாவதாக, இது மக்கள் தலைவர் ராகுல் காந்திக்கு எதிராக தீட்டப்படும் ஒரு மிகப்பெரிய தீய சதி திட்டமா? இரண்டாவது, மிரட்டல், வன்முறை, கொலை மிரட்டல் வழியான அரசியலை பாஜக ஆதரிக்கிறதா? மூன்றாவது, அரசின் நிர்வாகத்தை விமர்சிக்கும் அரசியலமைப்பு பொறுப்பில் உள்ள மக்களவை எதிர்க்கட்சி தலைவர் மற்றும் பிற எதிர்க்கட்சி தலைவர்களுக்கு எதிரான வன்முறையை இயல்பான ஒன்றாக்க பாஜக முயல்கிறதா? என்ற 3 கேள்விகளுக்கு விடை காண காங்கிரஸ் விரும்புகிறது.

இந்த கொலை மிரட்டல் சட்டத்தின் ஆட்சியின் மீதும், ஜனநாயகத்தின் பாதுகாப்புக்கும், ஒவ்வொரு குடிமகனுக்கும் பாதுகாப்பை உறுதி செய்யும் அரசியலமைப்பின மீதும் நடத்தப்பட்ட நேரடி தாக்குதல். இவ்வாறு காங்கிரஸ் தெரிவித்துள்ளது. இந்த விஷயத்தில் நடவடிக்கை எடுக்கக்கோரி காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால், உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

### பிஹார் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு

# 68.5 லட்சம் பெயர்களை நீக்கியது தேர்தல் ஆணையம்



பிஹார் இறுதி வாக்காளர் பட்டியலை இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக 68.5 லட்சம் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளது.

பிஹாரில் வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொள்ளும் நோக்கில் சிறப்பு தீவிர திருத்த நடைமுறையை தேர்தல் ஆணையம் அமல்படுத்தியது. இதையடுத்து, அதிகாரிகள் வீடு வீடாகச் சென்று வாக்காளர்களைச் சரிபார்த்தனர். இறந்தவர்கள், இடம் மாறியவர்கள், இரட்டை பதிவு கொண்டவர்கள் என 65 லட்சம் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. பிஹார் வாக்காளர் என்பதற்கான ஆவணங்களின் பட்டியலில் ஆதார் அடையாள அட்டை சேர்க்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கிலும், ஆதார் அட்டையை அரசு ஆவணங்கள் பட்டியலில் இணைப்பது குறித்து தேர்தல் ஆணையம் பரிசீலிக்க வேண்டும் என அறிவுறுத்தியது.

சிறப்பு தீவிர திருத்தத்தால் பிஹார் வாக்காளர் பட்டியல் பெரும் சர்ச்சையை எதிர்கொண்ட நிலையில், தற்போது இறுதி வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டதை அடுத்து முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் மற்றும் எழுப்பப்பட்ட ஆட்சேபனைகளைக் கணக்கில் கொண்டு இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதாக இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. voters.eci.gov.in என்ற இணைய முகவரியில் சென்று பிஹார் வாக்காளர்கள் தங்கள் பெயர்களை பார்க்கலாம் என்று தேர்தல் ஆணையத்தின் சமூக ஊடகப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரைவு வாக்காளர் பட்டியலுக்குப் பிறகு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தில் கூடுதலாக 3.66 லட்சம் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், ஒட்டுமொத்தமாக 68.5 லட்சம் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில், புதிதாக 21.53 லட்சம் பேர் வாக்காளர் பட்டியலில் புதிதாக இடம்பெற்றுள்ளனர். இதன் மூலம், மொத்தத்தில் 47 லட்சம் பெயர்கள் குறைந்துள்ளன. இதன் காரணமாக, கடந்த ஜூன் 24ம் தேதி நிலவரப்படி 7.89 கோடியாக இருந்த பிஹார் வாக்காளர்களின் எண்ணிக்கை தற்போது 7.42 கோடியாக குறைந்துள்ளது.

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ள நிலையில், பிஹார் சட்டப்பேரவைத் தேர்தல் தேதி குறித்த அறிவிப்பை தேர்தல் ஆணையம் விரைவில் வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.






# அதிக ஆம்புலன்ஸ்கள் வந்தது எப்படி?

## தமிழக அரசு உயரதிகாரிகள் அமுதா, செந்தில்குமார் வீடியோவுடன் விளக்கம்

கரூரில் 41 பேர் உயிரிழந்த விவகாரத்தில், தவெக பிரச்சாரத்தின்போது அதிக எண்ணிக்கையிலான ஆம்புலன்ஸ்கள் வந்தது எப்படி என்பது தொடர்பாக தமிழக அரசின் ஊடகச் செயலர் பி.அமுதா, சுகாதாரத் துறைச் செயலர் பி.செந்தில்குமார் ஆகியோர் வீடியோ ஆதாரங்களுடன் விளக்கம் அளித்தனர்.



கரூரில் கடந்த 27ம் தேதி தவெக தலைவர் விஜய் பிரச்சாரக் கூட்டத்தின்போது நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இது தொடர்பாக விஜய் சில கருத்து களை வீடியோவில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், தமிழக அரசின் ஊடகச் செயலரும், வருவாய்த் துறைச் செயலருமான பி.அமுதா, சட்டம் ஒழுங்கு கூடுதல் டிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதம், சுகாதாரத் துறைச் செயலர் பி.செந்தில்குமார் ஆகியோர் நேற்று தலைமைச்செயலகத்தில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தனர். அப்போது, விஜய் பிரச்சாரம் தொடர்பான வீடியோ காட்சிகளை காண்பித்து, கூட்ட நெரிசல் நிகழ்வுகளை விவரித்தனர்.

அப்போது அமுதா கூறியதாவது: கரூர் சம்பவம் தொடர்பாக சமூக வலைதளங்களில் தவறான கருத்துகள் பகிரப்படுகின்றன. அன்று பிற்பகல் 3 மணி வரை 10,000 பேர்தான் இருந்தனர். ஆனால், விஜய் வந்த பிறகு கூட்டம் படிப்படியாக அதிகரித்து கூடுதலாக 25 ஆயிரம் பேர் கூடியிருப்பார்கள் என்று கருதுகிறோம். அவரது வாகனத்தின் பின்னால் ஏராளமானோர் வாகனங்களில் வந்துள்ளனர். அன்று காலை முதலே காத்திருந்தவர்களுக்கு தண்ணீர்கூட கிடைக்கவில்லை. நீண்ட நேரம் காத்திருந்ததால் நிறைய பேருக்கு தண்ணீர் சத்து குறைவு ஏற்பட்டு சிரமப்பட்டுள்ளனர். நெரிசல் சம்பவத்துக்குப் பிறகு இரவு 7.40 மணி முதல் 9.45 மணி வரை, நெரிசலில் சிக்கியவர்கள் ஆம்புலன்ஸ்களில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.



பிரச்சாரத்தின்போது மின்சாரம் தடை செய்யப்பட்டதாக தகவல் பரப்பப்படுகிறது. ஆனால், பிரச்சாரத்தின்போது தடையில்லா மின்சாரம் விநியோகிக்கப்பட்டதாக மின்சார வாரிய தலைமைப் பொறியாளர் விளக்கம் அளித்திருக்கிறார். மின் விளக்குகளும் அணைக்கப்படவில்லை. கூட்ட நெரிசல் அதிகரித்து,அருகேயிருந்த ஜெனரேட்டர் அறைக்குள் கூட்டம் முண்டியடித்து உள்ளே நுழைய முயன்றபோது ஜெனரேட்டர் நிறுத்தப்பட்டது. அதனால்தான் போகஸ் லைட் எரியவில்லை.

கரூர் சம்பவத்தைப் பொருத்தவரை அரசு சார்பில் உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டு, விசாரணை நடைபெற்று வருகிறது. அதேபோல, சீனியர் எஸ்.பி. தலைமையில் போலீஸ் விசாரணை நடைபெற்று வருகிறது. இவ்வாறு அவர் கூறினார். கூடுதல் டிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதம் கூறும்போது, "கரூர் கூட்டத்துக்கு 10 ஆயிரம் பேர் வருவார்கள் என்று கூறி அனுமதி கேட்கப்பட்டது. பொதுவாக 50 பேருக்கு ஒரு காவலர் பணியில் அமர்த்தப்படுவது வழக்கம். எனினும், விஜய் கலந்துகொண்ட முந்தைய கூட்டங்களில் கூடிய கூட்டத்தின் அடிப்படையில் 20 பேருக்கு ஒரு காவலர் என்ற அடிப்படையில் நியமித்தோம்.

கூட்டத்தினர் மீது போலீஸ் தடியடி நடத்தியதாக கூறுகிறார்கள். விஜய் கார் பின்னால் வந்த கூட்டம், அவரது கார் நின்றவுடன் முன்பக்கம் முண்டியடித்து வர முயற்சித்ததால், கூட்டத்தை விலக்கவே போலீஸார் முயற்சித்தனர். கூட்டம் அதிகரித்ததால் கூடுதல் போலீஸார் வரவழைக்கப்பட்டனர்" என்றார்.

சுகாதாரத் துறை செயலர் செந்தில்குமார் கூறியதாவது: திடீரென அதிக எண்ணிக்கையிலான ஆம்புலன்ஸ்கள் எப்படி அங்கு வந்தன என்ற சந்தேகம் எழுப்பப்பட்டு வருகிறது. நெரிசல் சம்பவம் ஏற்பட்டு 108 ஆம்புலன்ஸ் கட்டுப்பாட்டு அறைக்கு இரவு 7.14 மணிக்கு அழைப்பு வந்தது. உடனடியாக 7.20 மணிக்கு சம்பவ இடத்துக்கு ஓர் ஆம்புலன்ஸ் அனுப்பப்பட்டது. பின்னர், இரவு 7.15 மணிக்கு அடுத்த அழைப்பு வரவே 7.23 மணிக்கு அடுத்த ஆம்புலன்ஸ் சென்றது. தொடர்ந்து அடுத்தடுத்து அழைப்புகள் வந்ததால், உடனடியாக அருகில் உள்ள மாவட்டங்களில் இருந்து ஆம்புலன்ஸ்கள் வரவழைக்கப்பட்டன. தவெக கட்சி சார்பில் 7, அரசின் 108 ஆம்புலன்ஸ்கள் 6, மற்ற மாவட்டங்களில் இருந்து 33 ஆம்புலன்ஸ்கள் அங்கு சென்றன.

எதற்காக அவசரமாக பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டது என்று கேட்கிறார்கள். பொதுவாக, அதிக எண்ணிக்கையிலான உயிரிழப்புகள் நிகழும்போது பிரேதப் பரிசோதனை செய்ய காலதாமதமாகும். இது பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு வேதனையை அதிகரிக்கும் என்பதால், நல்லெண்ணத்தில் அடிப்படையில் பிரேதப் பரிசோதனை விரைவாக செய்து முடிக்கப்பட்டது. இவ்வாறு அவர் கூறினார். பேட்டியின்போது, உள்துறைச் செயலர் தீரஜ்குமார், டிஜிபி (பொறுப்பு) வெங்கட்ராமன் உடனிருந்தனர்.

## ‘சி.எம். சார்’ என் மீது கை வையுங்கள்

# தொண்டர்களை விட்டுவிடுங்கள்

## வீடியோ வெளியிட்டு நடிகர் விஜய் ஆவேசம்



விரைவில் அனைத்து உண்மைகளும் வெளியே வரும். ‘சி.எம். சார்’ பழி வாங்க வேண்டும் என்றால் என் மீது கை வையுங்கள்; தொண்டர்களை விட்டு விடுங்கள் என்று வீடியோ வெளியிட்டுள்ளார் தவெக தலைவர் விஜய்.

கரூரில் தவெக பிரச்சாரக் கூட்டத்தின் போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் குறித்து விஜய் மவுனமாக இருந்ததால், அவருக்கு பல்வேறு தரப்பில் இருந்து ஆதரவும், எதிர்ப்புகளும் குவிந்தன. இந்நிலையில், தவெக தலைவர் விஜய் 2 நாட்களுக்குப் பிறகு கரூர் சம்பவம் தொடர்பாக நேற்று வீடியோ வெளியிட்டுள்ளார். அவர் பேசியிருப்பதாவது: என் வாழ்க்கையில் இதுபோன்ற வலி நிறைந்த தருணத்தை நான் எதிர்கொண்டது கிடையாது. சுற்றுப் பயணத்தில் என்னை மக்கள் பார்க்க வருவதற்கு, அவர்கள் என் மீது வைத்துள்ள அன்பும், பாசமும்தான் காரணம். அந்த அன்புக்கும், பாசத்துக்கும் நான் எப்போதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதனால்தான் இந்த சுற்றுப் பயணத்தில் மற்ற எல்லா விஷயங்களையும் தாண்டி, அரசியல் காரணங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, மக்கள் பாதுகாப்புக்கான இடங்களை தேர்ந்தெடுத்து, அந்த இடங்களுக்கு அனுமதி தர கோரி காவல் துறையிடம் கேட்போம். ஆனால், நடக்கக் கூடாதது நடந்துவிட்டது. நானும் மனிதன் தான். அந்த நேரத்தில், அத்தனை பேர் பாதிக்கப்பட்டிருக்கும் போது, அந்த ஊரை விட்டு என்னால் எப்படி கிளம்பிவர முடியும்? நான் திரும்ப அங்கே போனால், அதை காரணம் காட்டி, பதற்றமான நிலையில், அங்கு வேறு சில அசம்பாவிதங்கள் எதுவும் நடந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் நான் அங்கு மீண்டும் செல்லவில்லை.

இந்த நேரத்தில் சொந்தங்களை இழந்து தவிக்கும் அத்தனை குடும்பங்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்கள். எனக்குத் தெரியும், என்ன சொன்னாலும் இது ஈடாகாது. மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் அனைவரும் விரைவில் குணமடைந்து வர வேண்டும் என நான் வேண்டுகிறேன். கூடிய விரைவில் உங்கள் அனைவரையும் நான் சந்திப்பேன்.

இந்த இக்கட்டான நேரத்தில் எங்களுடைய வலிகளை, நிலைமையைப் புரிந்து கொண்டு, எங்களுக்காகப் பேசிய அரசியல் கட்சிகளை சார்ந்த நண்பர்கள், தலைவர்கள் அனைவருக்கும் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கரூரில் மட்டும் ஏன்: ஏறத்தாழ 5 மாவட்டங்களுக்கு பிரச்சாரத்துக்கு சென்றோம். அங்கெல்லாம் எதுவும் நடக்கவில்லை. ஆனால், கரூரில் மட்டும் ஏன் இப்படி நடந்தது? மக்களுக்கு எல்லா உண்மைகளும் தெரியும். எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கரூரைச் சேர்ந்த மக்கள், அந்த

# கைதான தவெக நிர்வாகிகளுக்கு
# 15 நாள் நீதிமன்ற காவல்

கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த சம்பவத்தில் கைது செய்யப்பட்ட தவெக நிர்வாகிகள் 2 பேரை 15 நாள் நீதிமன்றக் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.



கரூர் வேலுசாமிபுரத்தில் செப். 27ம் தேதி நடைபெற்ற தவெக பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இது தொடர்பாக கரூர் மேற்கு மாவட்டச் செயலாளர் வி.பி.மதியழகன், பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், மாநில இணைச் செயலாளர் நிர்மல்குமார் ஆகியோர் மீது கரூர் நகர போலீஸார் 5 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இதில் தலைமறைவாக இருந்த மாவட்டச் செயலாளர் மதியழகன், அவருக்கு அடைக்கலம் கொடுத்த கட்சி நிர்வாகி பவுன்ராஜ் ஆகியோரை திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறையில் தனிப்படை போலீஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.





பின்னர் அவர்களை கரூர் குற்றவியல் நீதிமன்றத்தில், நீதிபதி பரத்குமார் முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தினர். அப்போது நீதிபதி பரத்குமார் தவெகவினரிடம், "நீங்கள் உங்கள் தலைவரை முதல்வர், மற்ற தலைவர்களைப்போல நினைத்து விட்டீர்களா? அவர் ஒரு ஸ்டார். அவரைப் பார்க்க ஏராளமானோர் வருவார்கள். அதை கணிக்க தவறிவிட்டீர்களா?" என்பன உள்ளிட்ட பல்வேறு கேள்விகளை எழுப்பினார்.

அப்போது, போலீஸார் தங்களை ஒருமையில் பேசுவதாக நீதிபதியிடம் தவெகவினர் முறையிட்டனர். அதற்கு நீதிபதி, "அவர்களை அடிக்கவோ, ஒருமையில் பேசவோ கூடாது" என போலீஸாருக்கு அறிவுறுத்தியதுடன், இருவரையும் 15 நாள் நீதிமன்ற காவலில் வைக்க உத்தரவிட்டார். இதையடுத்து, இருவரும் திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். ●

---

உண்மைகளை எல்லாம் வெளியே சொல்லும் போது, எனக்கு கடவுளே நேரில் வந்து இறங்கி அந்த உண்மைகளை சொல்வது போலத் தோன்றியது.

எந்த தவறும் செய்யவில்லை. விரைவில் எல்லா உண்மைகளும் வெளியே வரும். எங்களுக்கு தரப்பட்ட இடத்தில் நாங்க நின்று பேசிக்கொண்டு இருந்ததை தவிர, நாங்கள் எந்த தவறும் செய்யவில்லை. நாங்கள் எதுவுமே செய்யவில்லை. ஆனாலும், எங்கள் கட்சியை சேர்ந்த நிர்வாகிகள், தோழர்கள் மீதும், சமூக வலைதளங்களைச் சேர்ந்த நண்பர்கள், தோழர்கள் மீதும் குற்றப்பத்திரிகை (எஃப்ஐஆர்) தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

'சிஎம் சார்' உங்களுக்கு பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் ஏதாவது இருந்தால், என்னை என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். தொண்டர்கள் மீது கை வைக்காதீர்கள். நான் வீட்டில் இருப்பேன் அல்லது அலுவலகத்தில்தான் இருப்பேன். என்னை என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். நண்பர்களே, தோழர்களே, நமது அரசியல் பயணம், இன்னும் வலிமையாகவும், இன்னும் தைரியத்தோடும் தொடரும். இவ்வாறு விஜய் பேசியுள்ளார். ●

# ஆணைய அறிக்கை அடிப்படையில் நடவடிக்கை



கூட்ட நெரிசலில் சிக்கி காயமடைந்த நிலையில் கரூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை முதல்வர் ஸ்டாலின் சந்தித்து உடல்நலம் குறித்து கேட்டறிந்தார். உடன் அமைச்சர் கே.என்.நேரு, எம்எல்ஏ செந்தில் பாலாஜி உள்ளிட்டோர்.

கரூரில் தவெக தலைவர் விஜய் பங்கேற்ற பிரச்சாரக் கூட்டத்தின்போது கூட்ட நெரிசல் ஏற்பட்டதில் 40 பேர் உயிரிழந்தனர். 51 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதையடுத்து, தனி விமானம் மூலம் சென்னையில் இருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு 1.30 மணி அளவில் திருச்சி வந்த முதல்வர் ஸ்டாலின், அங்கிருந்து காரில் கரூர் சென்றார்.


பின்னர், கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உயிரிழந்தவர்களின் உடலுக்கு நேற்று அதிகாலை 3.15 மணி அளவில் அஞ்சலி செலுத்தினார். காயமடைந்தவர்களை சந்தித்து ஆறுதல் கூறினார். பின்னர், செய்தியாளர்களிடம் முதல்வர் ஸ்டாலின் கூறியதாவது: மிகுந்த துயரத்தோடு, கனத்த இதயத்துடன், விவரிக்க முடியாத வேதனையில் இருக்கிறேன். நெரிசலில் சிக்கி பலர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக செய்தி கிடைத்தவுடன், ஆட்சியர் தங்கவேல், எம்எல்ஏ செந்தில் பாலாஜி ஆகியோரை தொடர்பு கொண்டு, உடனடியாக மருத்துவ உதவிகளை அளிக்க உத்தரவிட்டேன்.

## முதல்வர் ஸ்டாலின் உறுதி

உயிரிழப்பு எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்ததால், அமைச்சர்கள் அன்பில் மகேஸ், மா.சுப்பிரமணியன் ஆகியோரையும் கரூருக்கு அனுப்பி வைத்தேன். அமைச்சர்கள் துரை முருகன், கே.என்.நேரு, எ.வ.வேலு ஆகியோருடன் ஆலோசனை நடத்தி போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டேன். இங்கு காலையில் வரலாம் என திட்டமிட்ட நிலையில், தொடர்ந்து வந்த செய்திகள் மனதை கலங்கடித்ததால், மனது கேட்கவில்லை. வீட்டில் இருக்க முடியாமல், உடனடியாக புறப்பட்டு வந்துவிட்டேன்.

அரசியல் கூட்டத்தில் இதுவரை நடக்காத சம்பவம். இனியும் இதுபோல நடக்கக் கூடாது. தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ள 51 பேர் விரைவில் குணமடைவார்கள் என நம்புகிறேன்.உயிரிழந்தவர்களின் உடல்களுக்கு கனத்த இதயத்துடன் அஞ்சலி செலுத்தினேன். அவர்களது குடும்பத்தினருக்கு என்ன ஆறுதல் கூறி தேற்றுவது என தெரியவில்லை.

# வதந்தி பரப்பியதாக பிரபல யூடியூபர் கைது



முதல்வர் ஸ்டாலின் ஒரு காணொலி வெளியிட்டிருந்தார். அதில், "கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக சமூக வலைதளங்களில் ஏராளமான காணொலிகள் பரவி வருகின்றன. இதில் போலியான, ஜோடிக்கப்பட்ட காணொலிகளும் உள்ளதாக கூறப்படுகிறது. இதுபோன்ற பொய் செய்திகளை பரப்ப வேண்டாம்" என்று வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து சென்னை காவல் ஆணையர் அருண் நேற்று ஒரு செய்திக்குறிப்பு வெளியிட்டிருந்தார். அதில் அவர், "கரூரில் நடைபெற்ற அரசியல் கூட்ட நெரிசல் விபத்து குறித்து யாரும் எவ்வித வதந்தியையும் பரப்ப வேண்டாம். விசாரணை அடிப்படையில் அரசு உரிய நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், வலைதளங்களில் சிலர் பரப்பும் பொய் செய்திகள் பொதுமக்கள் அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் அமைகிறது.

இதுதொடர்பாக பெறப்பட்ட புகார்களின்பேரில், பொது வெளியில் வதந்தி பரப்பும் வகையில் சமூக வலைதளங்களில் செய்திகளை பதிவு செய்த வலைதள கணக்காளர்கள் 25 பேர் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.அவர்கள் மீது கைது நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே, மக்களுக்கு அச்சம் ஏற்படுத்தும் வகையிலும், பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையிலும் யாரும் சமூக வலைதளங்களில் பதிவிட வேண்டாம். மீறி செயல்படுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்." என எச்சரித்திருந்தார்.

இதனையடுத்து, கரூர் விவகாரம் தொடர்பாக சமூக வலைதளங்களில் வதந்தி பரப்பியதாக பாஜக கலை மற்றும் கலாச்சார பிரிவு மாநில செயலாளர் சகாயம் (38), தவெக மாங்காடு உறுப்பினர் சிவனேசன் (36), அதே கட்சியின் ஆவடி வட்டச் செயலாளர் சரத்குமார் (32) ஆகிய 3 பேரை சென்னை போலீஸார் கைது செய்தனர். இதன் நீட்சியாக பிரபல யூடியூபர் ஃபெலிக்ஸ் ஜெரால்டும் கைது செய்யப்பட்டதாகத் தெரிகிறது. சென்னையில் உள்ள அவரது வீட்டில் இருந்து ஃபெலிக்ஸ் ஜெரால்டை போலீஸார் கைது செய்து அழைத்துச் சென்றனர். முதல்கட்ட தகவலில் கரூர் துயரச் சம்பவம் தொடர்பாக வதந்தி பரப்பியதற்காக ஃபெலிக்ஸ் கைதாகியுள்ளார் என்று கூறப்படுகிறது.



*நெரிசல் சம்பவம் குறித்து விசாரிக்க உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையம் அமைக்க உத்தரவிட்டுளேன். தவெக தலைவர் விஜய் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்கிறீர்கள். அரசியல் நோக்கத்தோடு பதில் அளிக்கவிரும்பவில்லை. ஆணையத்தின் அறிக்கையை விரைவில் பெற்று, அதன் அடிப்படையில் உரியநடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு முதல்வர் கூறினார்.*

*அக்கறையுடன் விசாரித்த ராகுல்: முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், 'கரூரில் நடந்துள்ள துயரச் சம்பவம் குறித்து உள்ளார்ந்த அக்கறையுடன் விசாரித்து, சிகிச்சை பெற்றுவருவோரின் இன்னுயிர் காக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து விசாரித்த சகோதரர் ராகுல் காந்திக்கு நன்றி'என்று தெரிவித்துள்ளார்.*

# இனி நாம் எல்லாம் ஹீரோ தான்.....

கதை ஆசிரியர்: ராமகிருஷ்ணன்

அங்கு கடல் போல் காட்சி அளித்தது வீராணம் ஏரியில் தண்ணி எங்கும் பருந்து விரிந்து இருந்தது இளைஞர்கள் எல்லாம் ஏரியின் கரையில் இருந்தபடியே ஒவ்வொருவராக பல்டி அடித்தும் குட்டி கரணம் அடித்தும் தலை கீழாக பாய்ந்தும் நீச்சல் அடித்தார்கள் அங்கு குளித்துக் கொண்டிருந்த ஒரு சிலர் மேல் இவர்கள் நீச்சலடித்த தண்ணீர் அவர்கள் மேல் விழுந்தது அதில் ஒரு சில இளஞ்சிகள் டேய் மெதுவா குளிங்கலன்டா நீங்கள் நீச்சல் அடிக்கிறதுனால எல்லாரும் மேலையும் நீங்க அடிக்கிற தண்ணி தெறிக்குதுடா என்றாள் ரித்திகா என்ற பெண் அதற்கு அந்த இளைஞன் சொன்னான் தண்ணினா எல்லாரும் மேலையும் படத்தான் செய்யும் ஏரிக்கு குளிக்க வந்தாஇது எல்லாம் பார்க்க கூடாது என்றான்.



அதற்கு அந்த ரித்திகா என்ற பெண் சொன்னால் ஆமாடா ஏரிக்கு வந்தா பார்க்க கூடாதா அப்போ ஏரியாவுக்கு வந்தா பார்க்கலாமடா என்றால் அதற்கு அங்கு குளித்துக் கரையறி கொண்டு இருந்த ரூபிகா பேபி ரஃபியா ஜானகி சாந்தி ஜான்சி மது உமா ஜெயராணி இந்திராணி சுமித்ராஎல்லா பெண்களும் சொன்னார்கள் டேய் நாங்க குளிச்சு கரேறிகிட்டு இருக்கோம் எங்க மேல தண்ணி தெரிச்சா எப்படிடா இருக்கும் என்றார்கள் அந்த பெண்கள் நீங்க எல்லாம் சரியா குளிக்காத மாதிரி இருக்கும் என்றார்கள் அந்த இளைஞர்கள்ஏய் விடுங்கடி எல்லாம் நம்ம ஏறிய பையங்க தானே இன்னொரு நாள் பார்த்துக்கலாம் வாங்கடி எல்லாம் போலாம் நேரம் ஆயிடுச்சு என்று இளம் பெண்கள் எல்லாம் குளித்து வீடு திரும்பினார்கள்.



அங்கு இருந்த இளைஞர்கள் எல்லாம் டேய் நம்ம ஊர் பெண்கள் எல்லாம் போயிட்டாங்கடா நம்ம எல்லாம் ஜாலியா தொட்டு பிடிச்சு முங்கி விளையாடலாம்டா என்று விளையாடிக் கொண்டிருந்தார்கள் ஒருவர் ஒருவர் தொட்டு பிடித்து எல்லாம் ஜாலியாக வீரான ஏரியில் பல்டி அடித்தும் தொட்டுப்பிடித்தும் முங்கி முங்கி விளையாடிக் கொண்டு இருந்தார்கள் காலையில் போன இளைஞர்களை காணவில்லையே என்று ஒரு சில இளைஞர்களின் பெற்றோர்கள் வீராணம் ஏரி பக்கமா விளையாடுறாங்களா? குளிக்கிறார்களா என்று பார்க்கலாம் என்று ஆளுக்கு ஒரு சைக்கிளில் தேடி போனார்கள் ராமசாமியும் ராஜேந்திரன் அப்போது வரும் வழியில் குளித்து வீடு திரும்பி கொண்டிருந்தார்கள்.

அவங்க ஊரு பெண்கள் அந்தப் பெண்களிடம் இளைஞர்களின் பெற்றோர்கல் ஆண ராமசாமியும் ராஜேந்திரனும் கேட்டார்கள் ஏம்மா எங்க பையன்களை அந்தப் பக்கமா பார்த்தீங்களா அந்த ஏரியால குளிச்சுக்கிட்டு இருக்காங்களா நீங்களும் வீராணம் ஏரியில் தானே குளிச்சிட்டு வரீங்க என்று கேட்டார்கள் அதற்குஅந்தப் பெண்கள் எல்லாம் ஆமாங்க உங்க பையன் அவங்க பையன்




இன்னும் மேல தெருபையன் கீழ தெரு பையன் இன்னும் அவங்க கூட சேர்ந்த எல்லா பயங்களும் சேர்ந்து குளிக்க மட்டும்மா செய்றாங்க எங்கள நல்லாநனைக்கவும் செஞ்சாங்க எங்க மேலெல்லாம் தண்ணியாக்கி நனச்சி ட்டாங்க என்றார்கள் அந்த பெண்கள் எல்லாம் இதைக் கேட்ட இளைஞர்களின் பெற்றோர்கள் அவங்களா அப்படி செஞ்சாங்க எங்க இருக்காங்க நல்ல உரம் போட்டு வளர்த்தேன்லா அதான் நல்லா சவுக்கு மரம் போல வளந்துட்டாங்கலா அதான் அக்கம் பக்கத்துல இருக்க மரம் செடி தெரியாம நேரே வளர்ந்து விட்டோம் என நினைப்பா அவங்களுக்கு நேராக தான் வளர்ந்திருக்காங்க ஆனா நெறிமுறை தவறி எல்லாம் நடந்து இருக்காங்க என்று ராம சாமியும் ராஜேந்திரனும் பேசிக் கொண்டார்கள்.

நல்லா விளஞ்சிட்டுங்க போல அதான் காலையில போன மாடுங்க போலஇன்னும் வீடு திரும்பல என்று விரைவாக மிதிவண்டியை அளித்தினார்கள் ராமசாமியும் ராஜேந்திரனும் அங்கு குளித்துக் கொண்டிருக்கும் இளைஞர்களை தேடி வேக வேக மாக இளைஞர்கள் குளித்துக் கொண்டிருக்கும் வீரான ஏரிக்கு போனார்கள் அங்கு இளைஞர்கள் எல்லாம் கும்பலம் போட்டு கொஞ்சம் தொலைவான பகுதியில் ஏரியில் முங்கி முங்கி குளித்துக் கொண்டிருந்தார்கள் இதை பார்த்த இளைஞர்களின் பெற்றோர்கள் அவர் அவர் மகன்கள் பெயரை சொல்லி அழைத்தார்கள் அவர்கள் காதுகளில் விழுகிற மாதிரி இல்லை இதனால் இவர்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை, பெற்றோர்களான ராமசாமிக்கும் ராஜேந்திரனுக்கும் பொழுதும் ரொம்ப சாய்ந்து விட்டது சரி என்று விரு விருஎன்று இளைஞர்களின் பெற்றோர்களான ராமசாமியும் ராஜேந்திரனும் ஏரிக்குள் தண்ணிக்குள் இறங்கினார்கள் இதை கண்டுக்காம குளித்துக் கொண்டிருந்த இளைஞர்கள் முங்கி குளித்து தொட்டுப்பிடித்து விளையாடிக் கொண்டு இருந்தார்கள் எல்லா இளைஞர்களும் தண்ணிக்குள்ளே மூங்கி முங்கி தொட்டு பிடித்து விளையாடிக் கொண்டு இருந்தார்கள் அதுல ஒரு இளைஞன் தண்ணிக்குள் முங்கி வந்து பிடித்து தொட்டு விட்டேன் ஹவ் டுடா நீ என்றான் ஒருவரை அவன் தொட்டுப் பிடித்து அவுட் என்றவர் அவனுடைய தந்தை என்று தெரியாமல் தொட்டு விட்டேன் அவுட் என்று பார்த்தான் பக்ரி அப்போது தான் அவன் அப்பா என்று தெரிந்தது ஐயோ அப்பா என்று பயந்து போனான் ஐயோ அப்பா.




(தொடரும்)

**ராமகிருஷ்ணன்**
26/1 Raja Street, Bharathiyar Nagar,
Koyambedu Market Road,
Chennai - 600 107. Phone: 8681876155

# விடுதலை முழக்கத்தை வீடு எங்கும் வீதி எங்கும் நாடு எங்கும் முழக்கங்களை வெளிப்படுத்தினார்

காந்தி ஜெயந்தி இன் நாளில் அவர் நாட்டுக்காக அவர் செய்து எல்லாம் நல்ல நல்ல செயல்கள்தான் அதை நாம் சிந்தனையில் வைத்து அத்தனையும் பொன்மொழிகளாக ஏற்றிலும் பதிந்து பாட்டிலும் படித்து பாரத தேசத்தின் மகாத்மாவின் பிறந்த நாளை அனைவரும் கொண்டாடி மகாத்மா காந்தியின் புகழை போற்றி மகிழ்வோம் காந்தியின் புன்னகையும் எழுமையும் நம்பிக்கையும் விடுதலைக்கு முக்கிய பங்கு வகித்தது மக்களும் காந்தி அடிகள் வழியில் சென்று விடுதலை முழக்கத்தை வீடு எங்கும் வீதி எங்கும் நாடு எங்கும் முழக்கங்களை வெளிப்படுத்தி னார்கள்.



இதனால் வெள்ளையர் களின் ஆட்டம் அடக்கப்பட்டது ஆட்டம் கண்டது வெள்ளையர்கள் வெளியேற என்று நிறைய விடுதலை முழக்கங்கள் காந்தியின் முன்னணியில் நடைபெற்ற தால் நாட்டுக்கும் நமக்கெல்லாம் விடுதலை கிடைத்தது

மகாத்மா காந்தியின் மகத்தான சிந்தனையில் சிறந்த நாடாக இந்தியா நமக்கு அடையாளம் காட்டியது மகாத்மா காந்தி தான் அவர் சிந்தனை எல்லாம் சிறப்பானது நாட்டின் நலனுக்காக அவர் ஆற்றிய பணிகள் மிக சிறந்ததாக மக்கள் மனதில் பதிந்தது மௌனத்தினால் பல போராட்டங்களை வென்றார் நல்ல சிந்தனையாளும் நல்ல பேச்சாலும் மக்கள் மனதில் இடம் பிடித்தார் வெள்ளையர்களை நாட்டை விட்டு விரட்டவும் செய்தார். இதனால் மகாத்மா என்று பெயர் பெற்று போற்றப்பட்டார் இதனால் காந்தி மகானை மக்கள் புகழ்ந்து மகாத்மா காந்தி பிறந்த நாளை அனைவரும் போற்றி கொண்டாடி வணங்குவோம். மகிழ்வோம்.

காந்தி ஜெயந்தி என்னும் பொன்னான நாளை மகாத்மா காந்திக்கு ஜெய் மகாத்மா காந்திக்கு ஜெய் அவருக்கு புகழ் மாலை சூடுவோ.

**ராமகிருஷ்ணன்**
26/1 Raja Street, Bharathiyar Nagar,
Koyambedu Market Road,
Chennai - 600 107. Phone: 8681876155



# கரூர் நெரிசல் குறித்து உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணை

## பாஜக கூட்டணி எம்.பி.க்கள் குழு வலியுறுத்தல்

கரூர் சம்பவம் தொடர்பாக பதவியில் உள்ள உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணை நடத்த வேண்டும் என்று பாஜக கூட்டணி எம்.பி.க்கள் குழு தெரிவித்துள்ளது. கரூரில் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக விசாரிக்கவும், உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிக்கவும் பாஜக எம்.பி.க்கள் ஹேமமாலினி, அனுராக் தாக்கூர், தேஜஸ்வி சூர்யா மற்றும் கூட்டணிக் கட்சி எம்.பி.க்கள் என 8 பேர் கொண்ட குழுவை அமைத்து, பாஜக தேசியத் தலைவர் ஜே.பி. நட்டா உத்தரவிட்டார்.

அதன்படி, ஹேமமாலினி தலைமையிலான குழுவினர் நேற்று கரூர் வந்தனர். அவர்கள், வேலுசாமிபுரத்தில் சம்பவ இடத்தை ஆய்வு செய்ததுடன், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரையும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களையும் சந்தித்து ஆறுதல் கூறினர்.

பின்னர், எம்.பி.க்கள் ஹேமமாலினி, அனுராக் தாக்கூர் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை சந்தித்தபோது, அவர்கள் கூறுவதைக் கேட்டு தாங்க முடியாத வேதனை ஏற்பட்டது. நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யும் அரசியல் கட்சியினர் சரியான இடங்களை தேர்வு செய்யவேண்டும்.

மிகவும் குறுகிய இடத்தில் 30 ஆயிரம் பேர் கூடியுள்ளனர். ஆனால், மாவட்ட நிர்வாகம் என்ன செய்தது? காவல் துறை என்ன செய்தது? நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தவர்கள் என்ன செய்தார்கள் என பல்வேறு கேள்விகள் எழுகின்றன. மிகக் குறுகிய சாலையில் அனுமதி வழங்கியது தவறு.



கரூர் வேலுசாமிபுரத்தில் கூட்ட நெரிசல் ஏற்பட்ட இடத்தில் நேற்று ஆய்வு மேற்கொண்ட ஹேமமாலினி தலைமையிலான பாஜக கூட்டணி எம்.பி.க்கள் குழுவினர்.

விஜய் பேசிக் கொண்டிருந்த போது காலணி, பாட்டில்கள் வீசியதாகவும், ஜெனரேட்டர் இயங்காமல் மின்சாரம் துண்டிக்கப்பட்டதாகவும் கூறுகின்றனர். இதற்கு ஆளுங்கட்சியான திமுக அரசும், நிகழ்வுக்கு ஏற்பாடு செய்தவர்களும் பதில் அளிக்க வேண்டும்.

இந்த சம்பவம் தொடர்பாக, தற்போது பதவியில் உள்ள உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணை நடத்த வேண்டும். சுதந்திரமான, நியாயமான முறையில் விசாரணை நடத்தி, உண்மையை வெளிக்கொணர வேண்டும். இந்த சம்பவம் தொடர்பாக நாங்கள் 8 கேள்விகளை எழுப்பி, விசாரணை அதிகாரிகளிடமும், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களிடமும் வழங்க உள்ளோம்.

ஒரு வாரத்துக்குள் பதிலை பெற்று, அதில் உள்ள தகவல்களையும், பாதிக்கப்பட்டோர் தெரிவித்த கருத்துகளையும் அடிப்படையாகக் கொண்டு அறிக்கை தயாரித்து பாஜக தலைமையிடம் வழங்குவோம். இவ்வாறு அவர்கள் கூறினர். மத்திய இணை அமைச்சர் எல். முருகன், பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# சான்றோர் குரல்

| சந்தா விபரம்: | |
|---|---|
| ஆண்டு சந்தா | ரூ.300 |
| 5 ஆண்டு சந்தா | ரூ.1,500 |
| ஆயுள் சந்தா | ரூ.5,000 |

**வங்கி விபரம்:**

A/C HOLDER:
G.B.PACHAIYAPPAN
BANK: ICICI BANK
A/C NO: 021201596561
BRANCH: CHENNAI, SANTHOM
IFSC CODE: ICIC0000212

| விளம்பர கட்டணம் | |
|---|---|
| கலர் முழு பக்கம் | ரூ. 7,000.00 |
| 2-ம் பக்கம் (கலர்) | ரூ. 7,500.00 |
| பின்பக்க அட்டை (கலர்) | ரூ. 10,000.00 |
| பின்பக்க முன் அட்டை (கலர்) | ரூ. 7,500.00 |
| முழு பக்கம் (B/W) | ரூ. 3,000.00 |
| 1/2 பக்கம் (B/W) | ரூ. 1,500.00 |

**Contact No: 99622 35002**

Saandrorkural / சான்றோர் குரல்
Subscribe செய்யுங்கள்...

Saandrorkural saandrorkural@gmail.com Saandrorkural

*தினசரி செய்திகள்... உடனடி செய்திகளுக்கு...*

## சான்றோர் குரல் மல்டி மீடியா-வின் சான்றோர் குரல் நியூஸ் யூடியூப் சேனல்

SAANDROR KURAL NEWS

SUBSCRIBE LIKE COMMENT SHARE

# ஹரிஹர கோவிந்தனின் திருநாமம் போற்றி

கோவிந்தா கோவிந்தா ஹரிஹர கோவிந்தா கோவிந்தா ஹரிஹர கோவிந்தா கோவிந்தா கோடி கோடி வணக்கம் உனக்கு தானையா உன்னை வணங்கி வணக்கம் வணக்கம் சொல்கிறோம் தானையா கோவிந்தா கோவிந்தா ஹரிஹர கோவிந்தா கோவிந்தா உன்னை தேடி நாடி வருவோர்களும் பல கோடி கோடி பக்தர்கள் தானையா அதில் நாங்களும் உன்னை வணங்கி பாதம் பணிந்தோம் ஐயா கொட்டும் அறிவிலும் விட்டு விலகாத நீர் போல் குளிரும் பணியிலையும் சுடும் வெயிலையும் உன் தரிசனம் காண வந்த பக்தர்களும் பக்திகளும் மக்களின் கூட்டம் எத்தனையோ எத்தனையோ தானையா நீ எட்டி பார்த்தால் ஒரு தென்றல் போல் ஒரு இமைப் பொழுதில் சுகமாக எங்கள் குறை எல்லாம் தீருமே ஐயா தீருமே ஐயா செய்த பாவங்களும் விலகி போகும் ஐயா போகும் மே ஐயா இனி பாவம் எதுவும் செய்யாத மனம் எங்களுக்கு தந்து மகிழ வேணுமையா மகிழ வேணும்.

ஐயா நிறைவான நிறைய இன்பம் வந்து சேரணும் ஐயா எல்லா நன்மைகளும் எங்களுக்கு தந்து அருள் புரியணும் ஐயா கோவிந்தா ஹரிஹர கோவிந்தா கோவிந்தா ஹரிஹர கோவிந்தா வானமும் பூமியும் உன் கை வண்ணத்தில் தானையா கோவர்தன மலையே குடையாக்கிய மக்களை காத்து அருளிய கோவிந்தா கோவிந்தா ஹரிஹர கோவிந்தா உலகில் எல்லா உயிர்களும் உன் கண் பார்வையில் தானே ஐயா கோவிந்தா ஹரிஹர கோவிந்தா கோவிந்தா ஹரிஹர கோவிந்தா எங்கள் வாழ்வும் உங்கள் அருள் மலையில் நனைந்து மகிழுந்து வாழும் வாழ்க்கையாக வேணுமய்யா கோவிந்தா ஹரிஹர கோவிந்தா எங்கும் நிறைந்தவனே எதிலும் உயிர் மூச்சாய் இருப்பவனே கோவிந்தா எல்லோருக்குள்ளும் இறைவனாய் இருப்பவனும் நீதானையா கோவிந்தா ஹரிஹர கோவிந்தா இறைவா எல்லாம் நீங்கள் கொடுத்த வரம் தானையா கோவிந்தா ஹரிஹர கோவிந்தா நாங்கள் வாழும் வாழ்க்கை யாவும் உங்களால் வாழும் நல்ல வாழ்க்கை தானே ஐயா கோவிந்தா ஹரிஹர கோவிந்தா எல்லாம் உங்களால் வந்தது செல்வங்கள் தானையா கோவிந்தா ஹரிஹர கோவிந்தா மலரின் வாசம் உன்னால் வந்தது தான் ஐயா மன மகிழ்ச்சியும் உண்ணும் உணவும் நீ தந்தது தானே ஐயா எண்ணும் எழுத்தும் கண்ணும் கருத்துமாய் எல்லோருக்குள்ளும் நீ தந்தது



தானையா கோவிந்தா ஹரிஹர கோவிந்தா உன் அருளின் பார்வையில் எங்கள் விழியின் பார்வையில் அழகாய் தெரிவது எல்லாம் நீதந்துதானையா எண்ணத்தில் உருவாகும் நல்ல சிந்தனைகளும் நல்ல செயல்களும் நீதந்துதானையா கோவிந்தா ஹரிஹர கோவிந்தா காலத்தின் மாற்றமே ஸ்ரீ ராமரின் வருகையால் தானையா கதைகளில் கேட்டுப் பார்த்தால் தெரியும் .

ஸ்ரீராமரின் அவதாரங்களும் அவர் செய்த அற்புதங்களும் எத்தனையோ எத்தனையோ யுத்த பூமியில் யுத்தங்கள் எத்தனையோ எத்தனையோ அத்தனையும் வெற்றி கண்டு நிகழ்த்திய நிகழ்ச்சிகள் எல்லாம் அதர்மத்தை அளித்து தர்மத்தை காத்து நிலை நிறுத்தியதெல்லாம் நமக்கெல்லாம் நல்லது தானையா இதெல்லாம் ஹரிஹர கோவிந்தனின் மகிமைதான் எத்தனையோ எத்தனையோ கோவிந்தா கோவிந்தா ஹரிஹர கோவிந்தா கோவிந்தா ஹரிஹர கோவிந்தா கோவிந்தனின் திருநாமம் போற்றி போற்றி போற்றி நமோ நாராயண நமோ நமக

**ராமகிருஷ்ணன்**
26/1 Raja Street, Bharathiyar Nagar,
Koyambedu Market Road,
Chennai - 600 107. Phone: 9444842105

## திருப்பதி பிரம்மோற்சவம்:

# 28 டன் எடை, 32 அடி உயரம் கொண்ட தங்க ரதம்



திருப்பதி ஏழுமலையானின் தங்க ரதம் 28 டன் எடையில், 32 அடி உயரம் கொண்டதாகும். ஆண்டுக்கு 3 முறை மட்டுமே பக்தர்கள் இதனைக் காண இயலும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம் சார்பாக ஆண்டாண்டு காலமாக தேர்த் திருவிழாவை வெகு சிறப்பாக நடத்தி வருகின்றனர். ஒவ்வொரு பிரம்மோற்சவத்திலும் தேர்த்திருவிழா 8ம் நாள் காலை பிரம்மாண்டமான முறையில் மாட வீதிகளில் உலா வரும்.அதில் ஸ்ரீதேவி, பூதேவி சமேதராய் மலையப்பர் பக்தர்களுக்கு அருள் புரிவது ஐதீகம். ஆனால், இத்துடன் ஒரு வெள்ளி தேரையும் திருப்பதி தேவஸ்தானத்தின் உருவாக்கினர். அந்தத் தேரில் பிரம்மோற்சவ நாட்களில் உற்சவ மூர்த்திகள் 6ம் நாள் பவனி வந்து பக்தர்களுக்கு காட்சியளித்தனர்.

ஆனால், அந்த வெள்ளித் தேரில் அடிக்கடி மராமத்து பணிகள் நடைபெற்றதால், அதனை மாற்ற வேண்டும் என தேவஸ்தான அதிகாரிகள் தீர்மானித்தனர். இந்நிலையில், வெள்ளித் தேருக்கு பதிலாக தங்கத் தேரை ஏற்பாடு செய்யவும் திருமலை திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி, தங்க ரதத்தை செய்ய தமிழக கைவினை தயாரிப்பு சங்கத்துக்கு டெண்டர் கொடுக்கப்பட்டது. அதன்பேரில் 18 கைவினை கலைஞர்கள் திருமலைக்கு வந்து, அங்கேயே தங்கி இருந்து தங்கத்தேரை தயாரித்தனர். 28 டன் எடை கொண்ட இந்த தங்கத் தேர் 32 அடி உயரம் உள்ளதாகும். இதில் 2,900 கிலோ செப்பு தகடுக்கு 74 கிலோ எடையுள்ள தங்க முலாம் பூசப்பட்டது. இதில் 25,000 கிலோ மரம், 18 அங்குலம் செப்பு தகடுகள் 9 அடுக்குகளாக உபயோகப்படுத்தப் பட்டுள்ளன.

இதனை தயாரிக்க அப்போது ரூ.24.34கோடி செலவானது என திருப்பதி தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.இன்றுடன் 12 ஆண்டுகள் நிறைவு 2013ம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 30ம் தேதி இதே நாளில் காலை 9.05 மணிக்கு இந்த தங்க ரதத்தின் முதல் தேரோட்டம் நடந்தது. இன்றோடு இந்த தங்க ரதம் உருவாக்கப்பட்டு சரியாக 12 ஆண்டுகள் நிறைவடைகின்றன. ஆண்டுதோறும் இந்த தங்க ரதம் பிரம்மோற்சவம், ரத சப்தமி, ஆனிவார ஆஸ்தானம் ஆகிய 3 நாட்களில் மட்டுமே கோயிலில் வலம் வரும் என்பது குறிப்பிடத்தக்கது.

# முப்பெரும் தேவியர்களின் விழாக்களும் கொண்டாட்டங்களும்

நவராத்திரின் முப்பெரும் தேவி யரை உங்கள் அனைவரையும் வணங்கி வருக வருக என வரவேற்கிறோம் நவராத்திரியின் கொலுவில் நாங்கள் வைக்கும் கொலுவில் உங்கள் வருகையேள் எங்கள் கொலு எங்கும் முப்பெரும் தேவையாரே உங்கள் திரு முகங்கள் தானே முப்பெரும் தேவியரை உங்கள் அருளால் எங்கள் வாழ்வும் வளமும் நலமும் பெற்று வாழ வணங்குகிறோம் தாயே விஷயதசமி நல்நாளில் விழாக்களும் கொண்டாட்டங்களும் தான் தாயே அகிலமும் காக்கும் ஆதிபராசக்தி தாயே அங்காள பரமேஸ்வரி தாயே தசரா அன்னை குலசேகரப்பட்டினம் ஸ்ரீ முத்தாரம்மா தாயே தீமை எங்கெங்கு முளைக்கிறதோ அங்கெல்லாம்புது பிறவி எடுப்பவளே அதர்மம் எங்கெல்லாம் தலை தூக்குதோ அங்கெல்லாம் புதிய அவதாரம் எடுத்து அதை அழிக்கும் தாயே நீ எடுக்கும் அவதாரங்கள் தான் பூமியில் தீமைகளை அறுத்து அழிக்கும் நாள்தான் அறுவடை நாள் அது தீமையின் அறுவடை நாள் அன்னை ஆதி பராசக்தி தாயே விஜயதசமி நல்வாழ்த்துக்கள் அனைவருக்கும் ஆயுத பூஜை நல் நாளில் சரஸ்வதி தேவி அன்னையை உன் கலைகளை எல்லாம் உலகத்துக்கு குடையாய் அருள் மலையாய் அள்ளி கொடுக்கும் கலை மகளே எல்லோர் உள்ளத்திலும் எழுத்தாய் மொழிகளின் படைப்பாய் அருளாய் சொலிபவளே கலைமகளே கலைவாணியே சரஸ்வதி பூஜையை கண்டு மகிழ்வவளே சமுதாயத்துக்கு நல்ல கல்வி என்னும் கலையை அல்லி தரும் கலைமகளே ஆடை அலங்காரமும் கலைகளால் வருவது தானே அழகும் கலைகளால் வருவது தானே தாயே அதுவும் உன் அருள்தான் தாயே கலைமகளே கல்விக்கூடம் சென்று கல்வி கற்று மேதை ஆனவர்களும் உண்டு உன் அருளால் தான் கலைவாணியே கல்விக்கூடம் செல்லாத பேதைகளும் உன் அருள் பெற்று மேதைகளானதும் உண்டு கலைமகளே உன் அருளால் இந்த ஆயுத பூஜை திருநாளில் கல்வி என்னும் ஒலி தந்து கலை என்னும் பொருள் தந்து கருணை என்னும் அருள் தந்து செய்யும் தொழிலை யாவும் நலம் பெறவும் வளம் பெறசெய்து வாழ வேண்டும் தாயே கலைமகளே உன் அருள் வேண்டி வணங்குகிறோம் தாயே ஆயுதபூஜை திருநாள் நல்வாழ்த்துக்கள் அனைவருக்கும் நவராத்திரி விஜயதசமி ஆயுத பூஜை எல்லாம் விழாக்களும் சிறப்பாக நடைபெற்று விழாக்கள் எல்லாம் நல்ல விழாக்களாக நடந்துநிறைவு பெற வும்தாயே உன் அருள் தான் தாயே ஆதிபராசக்தியே தாயே அன்னை மகாலட்சுமி தாயே சரஸ்வதி தாயே அன்னையர்கள் முப்பெரும் தேவியர்கள் தானே நீங்கள் தானே தேவியரை விழாக்களும் பூஜைகளும் மிகசிறப்பாக நடக்க எங்களுக்கு ஊக்கங்களும் ஆக்கங்களும் தந்து ஆசி வழங்க வேண்டும் என்று வணங்கி மகிழ்கிறோம் முப்பரும் தேவியர்களே



கருணை என்னும் கடலில் அருள் என்னும் ஒலி பற்றி அருள் என்னும் பொருளாய் செல்வத்தை அல்லி வழங்க வேண்டும் லட்சுமி தேவி எங்களுக்கெல்லாம் செல்வத்தை அள்ளித் தரும் செல்வா அம்பிகையே என்று பெயர் பெட்ட ஆதி லட்சுமி தாயே உங்களை வணங்கிவருக வருக வருக என வரவேற்கிறோம் சொர்ணாம்பிகை தாயே சொத்து சுகம் எல்லாம் செல்வத்தால் வருவது தானே அதெல்லாம் உங்கல் அருளால் வருவது தானே அன்னை மகாலட்சுமி தேவியே உங்களை வருக வருக என்று வணங்கி உங்களை வரவேற்கிறோம் நவராத்திரி விஷயதசமி ஆயுத பூஜை மற்றும் எல்லா பூஜைகளும் நல்லதாகவும் மிக சிறப்பாகவும் நடக்க வேண்டி வணங்குகிறேன் தேவியர்களே முப்பெரும் தேவியர்களே உங்கள் வருகையால் இந்தப் பூலோகம் புண்ணியம் பெற்று நலமும் வளமும் பெற்று நாங்கள் எல்லாம் வாழ வேண்டு மென்று வேண்டி வணங்குகிறோம் முப்பெரும் தேவியர்களுக்கு கோடான கோடி வணக்கங்கள் தாயே கோடான கோடி பக்தர்களுக்கு நவராத்திரி விஜயதசமி ஆயுத பூஜை வாழ்த்துக்களும் நன்றிகளும்..

**ராமகிருஷ்ணன்**
26/1 Raja Street, Bharathiyar Nagar,
Koyambedu Market Road,
Chennai - 600 107. Phone: 9444842105

# திமுக கூட்டணிக் கட்சிகளை இபிஎஸ் ‘இடிக்கும்’ ரகசியம்?



தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகையை அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசிய விவகாரம் காங்கிரஸ் வட்டாரத்தில் காட்டத்தை கிளப்பி இருக்கும் நிலையில், திமுகவை விட்டுவிட்டு அதன் கூட்டணிக் கட்சிகளை பழனிசாமி வம்புக்கிழுத்துப் பேசுவது ஏன் என்ற சர்ச்சையும் வெடித்திருக்கிறது.

அதிமுக பாஜக உடன்படிக்கை ஏற்படுவதற்கு முன்பு திமுக கூட்டணியில் இருக்கும் சில கட்சிகளுக்கு, அந்தப் பக்கம் அணி மாறிவிடலாமா என்ற சபலமும் லேசுபாசாக இருந்தது. அதனால் அந்தக் கட்சிகளும் அதிமுகவை அட்டாக் செய்யவில்லை; அதிமுகவும் அதில் சில கட்சிகளை போற்றிப் பாடியது.

இந்த நிலையில், அனைவரும் சந்தேகப்பட்டது போலவே மீண்டும் அதிமுக பாஜக உறவு மலர்ந்தது. இதனால், திமுக கூட்டணிக் கட்சிகள் மாற்று சிந்தனையை மூட்டைகட்டி வைத்துவிட்டு, பாஜக உடன் அதிமுக கூட்டணி சேர்ந்ததை விமர்சிக்க ஆரம்பித்தன. அதேபோல் பழனிசாமியும் திமுக கூட்டணிக் கட்சிகளை காய்ச்சி எடுக்க ஆரம்பித்தார்.

முதலில் விசிகவை வம்புக்கிழுத்த பழனிசாமி, “விசிகவை திமுக விழுங்கிவிடும்” என்றார். அதற்கு, “எளிய மக்களின் கட்சியான விசிகவை யாராலும் வீழ்த்தவும் முடியாது; விழுங்கவும் முடியாது” என்று பதிலடி கொடுத்தார் திருமா.

அடுத்து, காம்ரேடுகளை கலாய்த்த பழனிசாமி, “இந்தத் தேர்தலோடு கம்யூனிஸ்ட் கட்சிகள் காணாமல் போய்விடும்” என்றார். இதற்கு பதில் சொன்ன சிபிஎம் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், “காணாமல் போகப் போவது கம்யூனிஸ்ட்களா... அதிமுகவா என்பதை 2026 தேர்தல் முடிவுகள் சொல்லும்” என்றார். அடுத்ததாக இப்போது காங்கிரஸ் அட்டாக்கில் வந்து நிற்கிறார் பழனிசாமி.

ஆளும் கூட்டணியை விமர்சிப்பது தான் எதிர்க் கட்சிகளின் வேலையே என்றாலும் பழனிசாமியின் விமர்சனங்களுக்குப் பின்னால், ‘என்ன சொன்னாலும் அந்தக் கூட்டணி அப்படியே இருக்கிறதே’ என்ற ஆதங்கமே மேலோங்கி இருப்பதாகச் சொல்லும் அரசியல் நோக்கர்கள், “மிகப்பெரிய ஒரு கட்சியை வழிநடத்தும் தலைவருக்கு தனி மனித தாக்குதல் நடத்தும் அளவுக்கு வன்மம் தேவை இல்லையே” என்கிறார்கள்.

பாஜக உடன் அதிமுக கூட்டணி சேர்ந்ததில் திமுகவுக்கு கோபம். அதேபோல் திமுக கூட்டணி கட்டுக்கோப்பாக இருப்பதில் அதிமுகவுக்குக் கோபம். இப்படித்தான் போய்க்கொண்டிருக்கிறது இன்றைய தமிழக அரசியல் களம். இதில், தாங்கள் அதிமுக உடன் இருப்பதால் திமுக அணியில் இருக்

கும் எந்தக் கட்சியும் அதிமுக அணிக்கு வராது என்று தெரிந்தும் பாஜக தலைவர்களும் திமுகவின் தோழமைக் கட்சிகளை துவைத்துத் தொங்க விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் தமிழிசை சவுந்தரராஜன், “திருமாவளவனை துணை முதல்வராக்க வேண்டும்” என்று ‘அக்கறைப்படுகிறார்’. ஆக, இவர்களின் ஏக்கமும் எதிர்பார்ப்பும் திமுக கூட்டணி எப்படியாவது சிதைந்து விடாதா என்பதாகவே இருக்கிறது.

பாஜக உடன் மீண்டும் கூட்டணி சேர்ந்தது மே, “இன்னொரு மிகப் பெரிய கட்சி அதிமுக கூட்டணியில் இணையப் போகிறது” என்று சஸ்பென்ஸ் வைத்தார் பழனிசாமி. ஆனால், அப்படி எந்தக் கட்சியும் எம்ஜிஆர் மாளிகைப் பக்கம் எட்டிப்பார்க்கவில்லை. அவர் சொன்ன அந்தக் கட்சி தவெகவாக இருக்குமோ என ஹாஷ்யங்கள் றெக்கை கட்டிய நிலையில், விஜய்யும் அதிமுக கூட்டணிக்கான கதவுகளை அடைத்துச் சாத்தினார். இதனால், அதிமுக அணிக்கு போகலாமா என யோசித்துக் கொண்டிருந்த தேமுதிகவும் பாமகவும் இப்போது என்ன அவசரம் என பதுங்கிவிட்டன.

இப்படி பாஜகவை தவிர அதிமுக முகாமுக்கு இதுவரைக்கும் வேறெந்த கட்சியும் வராத நிலையில், திமுக தனது கூட்டணியை கட்டுக்கோப்பாக வைத்திருப்பதுடன், இன்னும் சில கட்சிகளையும் தங்கள் பக்கம் ஈர்க்க தந்திரக் காய்களை நகர்த்தி வருகிறது. இதையெல்லாம் பார்த்துவிட்டுத்தான், திமுகவை விட்டுவிட்டு திமுக கூட்டணிக் கட்சிகளை விமர்சித்து அந்தக் கூட்டணிக்குள் குண்டு வீசிப் பார்க்கிறார் பழனிசாமி.

தனது விமர்சனங்களால் திமுக கூட்டணியில் இருக்கும் கட்சிகள் ரோஷப்பட்டு கூட்டணியை விட்டு வெளியேறிவிடாதா என்பதே பழனிசாமியின் எதிர்பார்ப்பு. ஆனால், அவர் தனக்குப் பக்கத்தில் பாஜகவை வைத்துக்கொண்டு பேசுவதால் திமுக கூட்டணிக் கட்சிகள் அவரது ஒவ்வொரு விமர்சனத்துக்கும் பதிலடி கொடுத்து வருகின்றன.

திமுக கூட்டணியை கலைப்பதற்கான விமர்சனங்கள் கைகொடுக்காமல் போனதால் அடுத்ததாக சமூக வலைதள பதிவுகள் மூலமாக, சும்மா இருக்கும் காங்கிரஸை சுரண்டிவிட ஆரம்பித்திருக்கிறார்கள். ‘காங்கிரஸ் கட்சி விஜய்யுடன் கூட்டணி வைத்தால் அந்தக் கூட்டணி 175 தொகுதிகளில் வெற்றி பெறும்’ என்று கருத்துக் கணிப்பில் தெரியவந்திருப்பதாக இப்போது சமூக வலைதளத்தில் செய்திகளைப் பரப்புகிறார்கள்.

அதற்கேற்ப காங்கிரஸ்காரர்களும், திமுக கூட்டணியில் எங்களுக்கு மரியாதை இல்லை, இம்முறை கூடுதல் சீட் கேட்போம், அமைச்சரவையிலும் பங்கு வேண்டும் என்றெல்லாம் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். பழனிசாமியும் பாஜகவும் எதிர்பார்ப்பதும் இதைத்தானே! ●

## கவிதை

# மடி



தாய் மடி கிடைக்காத போது
மனைவி மடி கிடைத்தது
காதலி மடி கிடைக்காத போது
பூங்கா மடி கிடைத்தது
தாய் மடி கிடைத்தவன்
அன்பானவனாகவும்
தன்னடக்கம் உள்ளவனாகவும் வாழ்கிறான்
மனைவி மடி கிடைத்தவன்
குடும்பத் தலைவனாக திகழ்கிறான்
காதலி மடி கிடைத்தவன்
புதிய சிந்தனையாளன் ஆகிறான்
பூங்கா மடி கிடைத்தவன்
கவிஞன் ஆகிறான்

**ராமகிருஷ்ணன்**
26/1 Raja Street, Bharathiyar Nagar,
Koyambedu Market Road,
Chennai - 600 107. Phone: 8681876155

# எத்தனை தொகுதிகளில் மநீம போட்டி?

## நிர்வாகிகளுடன் கமல்ஹாசன் முக்கிய ஆலோசனை



மக்கள் நீதி மய்யத்தின் மண்டல கலந்தாய்வு கூட்டம் சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கட்சியின் தலைவர் கமல்ஹாசன், மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு பொது மக்களிடம் உள்ள செல்வாக்கு, 2026 சட்டப்பேரவை தேர்தலில் எத்தனை தொகுதிகளில் போட்டியிடலாம்? என்பன குறித்து கட்சி நிர்வாகிகளிடம் கமல்ஹாசன் ஆலோசனை நடத்தினார். அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள தமிழகம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பணிகள் தொடர்பாக மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல் ஹாசன், கட்சி நிர்வாகிகளை செப்.18 முதல் 21ம் தேதி வரை மண்டல வாரியாகச் சந்தித்து ஆலோசனை நடத்துகிறார்.

இதற்காக சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள டிஎன் ராஜரத்தினம் கலையரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முதல்நாள் ஆலோசனை கூட்டம் நேற்று தொடங்கியது. கமல்ஹாசன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் காலையில் சென்னை மண்டல நிர்வாகிகளும், மாலையில் காஞ்சிபுரம் மண்டல நிர்வாகிகளும் பங்கேற்றனர். அவர்களுடன் கட்சியின் பொதுச்செயலாளர் ஆ.அருணாச்சலம், துணைத் தலைவர்கள் ஏ.ஜி.மவுரியா, ஆர்.தங்கவேலு உள்ளிட்ட நிர்வாகிகளும் பங்கேற்றனர்.

சென்னை மண்டல கலந்தாலோசனைக் கூட்டத்தில் கமல்ஹாசன் பேசும்போது, “எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் கற்றுக்கொள்ளுங்கள். ஆனால், தாய்மொழியை மறந்துவிடாதீர்கள். உங்களால் தீர்க்க முடிந்ததை மட்டும் வாக்குறுதியாகக் கொடுங்கள். என்னை சமூகரீதியாக அடையாளப்படுத்த சிலர் முயற்சி செய்கிறார்கள். நான் எந்த சமூகத்தைச் சேர்ந்தவன் என்பதை நான்தான் சொல்ல வேண்டும்.

நான் யார் என்பது எனது நடவடிக்கைகளிலேயே தெரியும். என்னை திமுகவில் சேர்ந்துவிட்டதாக சிலர் விமர்சனம் செய்கின்றனர். நீதிக்கட்சியில் இருந்து வந்த கட்சிதான் திமுக. நமது கட்சியிலும் நீதி உள்ளது” என்று கூறியுள்ளார்.

இக்கூட்டத்தில், மக்கள் நீதி மய்யத்துக்கு பொதுமக்களிடம் செல்வாக்கு எப்படி இருக்கிறது? 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் எத்தனை தொகுதிகளில் போட்டியிடலாம்? என்பது உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் தொடர்பாக கேட்கப்பட்டதாக நிர்வாகிகள் தெரிவித்தனர்.

கோவை மண்டலம், மாலை மதுரை மதுரை மண்டலம், நாளை காலை நெல்லை மண்டலம், மாலை திருச்சி மண்டலம், 21ம் தேதி காலை விழுப்புரம் மண்டலம், மாலை சேலம் மண்டலம் மற்றும் புதுச்சேரி என நிர்வாகிகளுடன் ஆலோசனை நடைபெற உள்ளது.

## பாஜகவின் சர்வாதிகார அரசியலுக்கு

# உடன்பட்டு துரோகம் செய்பவர்களை புறக்கணிக்க வேண்டும்



பாஜகவின் மலிவான சர்வாதிகார அரசியலுக்கு துணை போய் துரோகம் செய்பவர்களை புறக்கணிக்க வேண்டும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார். சென்னையில் நபிகள் நாயகத்தின் 1500 வது பிறந்தநாள் விழா நேற்று நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற முதல்வருக்கு வெள்ளி செங்கோலை நினைவுப் பரிசாக சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் வழங்கினார். பின்னர் அவர் பேசியதாவது: ஒற்றுமையே கொள்கையில் வெற்றி பெறுவதற்கான முதல்படி. காஸாவில் நடந்து வரும் துயரத்தை பார்த்து மனசாட்சியுள்ள யாரும் கவலைப்படாமல் இருக்க முடியாது. இதற்கு விரைவில் நல்ல தீர்வு ஏற்பட வேண்டும். இதற்கு இந்திய அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மீண்டும் வலியுறுத்துகிறேன்.

நபிகள் நாயகம் குறித்து ஏற்கெனவே பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுவிட்டது. முஸ்லீம்களுக்கு இடர் வருமேயானால் துணை நிற்கும் முதல் அரசியல் கட்சி திமுகதான். முத்தலாக் தடை சட்டம் அமல்படுத்தும்போது அதிமுக இரட்டை வேடம் போட்டது அனைவருக்கும் தெரியும். திமுக போன்ற கட்சிகள் உச்ச நீதிமன்றத்தில் நடத்திய சட்டப் போராட்டத்தால் தான் வக்பு திருத்தச்

### முதல்வர் அழைப்பு

சட்டத்தின் முக்கிய கூறுகளுக்கு தடை பெற்றிருக்கிறோம். பாஜகவின் மலிவான சர்வாதிகார, எதேச்சதிகார அரசியலுக்கு துணை போய் துரோகம் செய்பவர்களை புறக்கணிக்க வேண்டும்.

முஸ்லீம் மக்களின் உரிமையை பாதுகாத்து, உரிமையை பெற்றுத் தரும் இயக்கமாக அவர்களில் ஒருவராக திமுக எப்போதும் இருக்கும். இவ்வாறு அவர் பேசினார். இந்நிகழ்வில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தமிழ்நாடு வக்பு வாரிய தலைவர் கே.நவாஸ் கனி எம்.பி., தமிழக அரசு தலைமை காஜி (பொறுப்பு) மவுலவி முகமது அக்பர், ஐயுஎம்எல் தேசிய தலைவர் கே.எம். காதர் மொகிதீன், மமக தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா, திமுக இலக்கிய அணித் தலைவர் அ.அன்வர் ராஜா, மஜக தலைவர் தமிமுன் அன்சாரி, எஸ்டிபிஜ தலைவர் நெல்லை முபாரக், ஆற்காடு இளவரசர் முகமது அப்துல் அலி, சமுதாய ஒருங்ணைப்பாளர் அப்பல்லோ ஹனிஃபா, தமிழ்நாடு ஜமா அத்துல் உலமா சபை தலைவர் பி.ஏ.காஜா முயீனுத்தீன் பாகவி பங்கேற்றனர்.

# சேலத்திற்கு பல திட்டங்களை தந்திருக்கும் தமிழக அரசு!

## உதயநிதியை உச்சிகுளிர வைத்த பாமக எம்எல்ஏக்கள்




அப்பாவும் பிள்ளையும் ஆளுக்கொரு பக்கமாக ரெண்டுபட்டு நிற்கும் பாமகவில் அன்புமணி கோஷ்டி ஆளும் கட்சியை அநியாயத்துக்கு போட்டுத் தாக்கி வருகிறது. இதனால், இயல்பாகவே அய்யா கோஷ்டி ஆளும்கட்சியை அனுசரித்து நிற்கிறது. இந்த நிலையில், சேலத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்ட அரசு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இரண்டு கோஷ்டிகளையும் சேர்ந்த பாமக எம்எல்ஏக்கள் திமுக ஆட்சிக்கு திடீர் புகழாரம் சூட்டி திகைக்க வைத்தார்கள்.

சேலம் மேற்கு தொகுதி பாமக எம்எல்ஏவான அருள் மருத்துவர் ராமதாஸ் அணியில் இருக்கிறார். இவர் தான் பாமக உட்கட்சி விவகாரம் தொடர்பாக அன்புமணிக்கு எதிரான கருத்துகளை பதிவு செய்து வருகிறார். அதேசமயம் மேட்டூர் தொகுதி பாமக எம் எல்ஏவான சதாசிவம், அன்புமணி விசுவாசியாக தன்னை அடையாளம் காட்டிக் கொண்டு நிற்கிறார்.

கட்சி ரெண்டுபடுவதற்கு முன்னதாக சேலம் மாவட்டத்தில் நடைபெறும் அரசு விழாக்களில் அருளும் சாதாசிவமும் ஒன்றாகவே வந்து கலந்துகொள் வார்கள். ஆனால், பாமக ரெண்டுபட்டு பலகீனப்பட் டுப் போன பிறகு இருவரும் சம்பிரதாயத்துக்காகக் கூட சந்தித்துக் கொள்ள தயங்குகிறார்கள். அரசு விழாக் களில் கலந்து கொண்டாலும் ஆளுக்கொரு திசையில் வந்து உட்கார்ந்து இருந்துவிட்டுப் போவதை வாடிக் கையாக வைத்திருக்கிறார்கள்.

இந்த நிலையில், மகளிர் சுய உதவிக்குழு உறுப் பினர்களுக்கு ரூ.3,500 கோடி வங்கிக் கடன் இணைப் புகள் வழங்கும் நிகழ்ச்சிக்காக 16ம் தேதி சேலம் வந் திருந்தார் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின். இந்த நிகழ்ச்சிக்கான மேடையிலும் அருளும் சதாசிவமும் வழக்கம் போல ஆளுக்கொரு பக்கத்தில் தான் உட் கார்ந்திருந்தனர். ஆனால், இருவரும் திசைக்கொருவ ராய் இருந்தாலும் திமுக அரசை ஒருமித்த குரலில் பாராட்டிப் பேசி உதயநிதியையே உச்சிகுளிர வைத்து விட்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய பாமக எம்எல்ஏக்கள் இருவருமே, சேலம் மாவட்டத்துக்கு தமிழக அரசு பல திட்டங்களை செய்து கொடுத்திருப்பதாக பாராட்டியதுடன், தங்களது தொகுதியில் மேலும் தேவைகள் இருப்பதால் அதற்கான திட்டங்களையும் செயல்படுத்த வேண்டும் என்று பேசினர். அதிலும் அன்புமணி கோஷ்டி எம்எல்ஏவான சதாசிவம் பேசுகையில், “மாற்றுக் கட்சியினர் என்றும் பாரா மல் எங்களை துணை முதல்வர் விழாவுக்கு அழைத் திருப்பது சிறப்பானது” என்று குளிரவைத்தார்.

இதை மேற்கோள்காட்டி பேசிய உதயநிதி, “இந்த விழாவில் கலந்து கொண்டிருக்கும் இரண்டு எம்எல் ஏக்களுமே நமது இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் கிடையாது; நமது கூட்டணியைச் சேர்ந்தவர்களும் கிடையாது” என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே குறுக்கிட்ட அருள், “இப்ப கூட்டணியில் இல்

# சபரிமலை கோயில் ரூ.1,033 கோடியில் சீரமைப்பு

## கேரள முதல்வர் பினராயி விஜயன் அறிவிப்பு

கேரள அரசும் திருவிதாங்கூர் தேவஸ்தானமும் இணைந்து நடத்தும் சர்வதேச ஐயப்ப பக்தர்கள் சங்கமம் நிகழ்ச்சி பத்தனம்திட்டா மாவட்டம் பம்பையில் நேற்று காலை தொடங்கியது. முதல்வர் பினராயி விஜயன் சங்கமத்தை தொடங்கிவைத்தார். இதில், தமிழக அமைச்சர்கள் சேகர் பாபு, பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



**கேரள மாநிலம் பத்தனம்திட்டா மாவட்டம் பம்பையில் நடைபெற்ற உலக ஐயப்ப பக்தர்கள் மாநாட்டை கேரள முதல்வர் பினராயி விஜயன் தொடங்கிவைத்தார். நிகழ்ச்சியில் தமிழக அமைச்சர்கள் சேகர்பாபு, பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.**

இந்த நிகழ்ச்சியில் கேரள முதல்வர் பினராயி விஜயன் பேசியதாவது: சபரிமலை ஐயப்பனை தரிசிக்க வரும் பக்தர்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டே இருப்பதால் 2011– 12ம் ஆண்டில் சபரிமலை மாஸ்டர் பிளான் தொடங்கப்பட்டது.

சபரிமலை மாஸ்டர் பிளான் என்பது சன்னிதானம், பம்பை, பாரம்பரிய பாதைகள், நிலக்கல் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை மையமாகக் கொண்டது. 2050க்குள் இந்த திட்டங்கள் நிறைவடையும். இந்தத் திட்டத்துக்காக ரூ.1,033.62 கோடியை செலவு செய்ய கேரள அரசு முடிவு செய்துள்ளது. சன்னிதான மேம்பாட்டுக்காக முதல் கட்டமாக 2022–27க்குள் ரூ.600.47 கோடியும், இரண்டாம் கட்டமாக 202833க்குள் ரூ.100.02 கோடியும், மூன்றாம் கட்டமாக 2024–39க்குள் ரூ.77.68 கோடியும் ஒதுக்கப்படும்.

பம்பையை பொறுத்தவரை, ரூ.207.97 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். மலையேற்றப் பாதையை மேம்படுத்த ரூ.47.97 கோடி ஒதுக்கப்படும். ஒட்டுமொத்தமாக சன்னிதானம், பம்பை, மலையேற்றப் பாதைகள் ஆகியவற்றின் மேம்பாட்டுக்காக ரூ.1,033.62 கோடி செலவிடப்பட இருக்கிறது. இந்தத் திட்டத்தில் பக்தர்களின் வசதிக்காக பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்த உள்ளோம். இவ்வாறு முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்தார். ●

---

லை" என்று எடுத்துக் கொடுத்து சிரித்தார். அதை அர்த்தமாய் சிரித்தபடி ஆமோதித்த உதயநிதி, "ஆமாம்... இப்போது கூட்டணியில் இல்லை. ஆனாலும் இருவருமே நமது அரசை போட்டி போட்டுக்கொண்டு பாராட்டியுள்ளனர். அவர்கள் இருவரும் ஒருமித்து பாராட்டியுள்ளனர். இதேபோல், அவர்கள் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும்" என்றார்.

இந்த நிகழ்ச்சி முடிந்த பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அருள், "சேலம் மாநகரின் 45 சதவீதம் பகுதியானது எனது சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குள் வருகிறது. தொகுதியின் சில பகுதிகளில் சாக்கடை வசதி இல்லை. எனவே, அதற்கான சிறப்புத் திட்டத்தை நிறைவேற்றித் தரக்கோரி சிறப்புத் திட்ட அமலாக்கத்துறையின் அமைச்சரான உதயநிதி ஸ்டாலினிடம் தான் கேட்க முடியும். அதற்காகத்தான் இந்த விழாவில் கலந்து கொண்டு அவரிடம் எனது கோரிக்கைகளை வைத்துள்ளேன்" என்றார்.

நீங்களும் சதாசிவமும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் உதயநிதி அட்வைஸ் செய்தாரே... என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, "எங்களிடம் போட்டி இல்லை... பொறாமை இல்லை. எங்களை உருவாக்கியவர் டாக்டர் ஐயா. திமுகவுடன் முதலில் கூட்டணியில் இருந்தோம். இப்போது இல்லை என்பதைத் தான் அப்படிச் சொன்னேன்" என்று கெட்டிக்காரத்தனமாக பதில் சொன்னார் அருள்! ●

# 90 பேருக்கு கலைமாமணி விருது

## 2021, 2022, 2023க்கான முழு பட்டியல்




தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தால் வழங்கப்படும் கலைமாமணி விருதை தமிழக அரசு அறிவித்துள்ளது. இந்த விருது, பல ஆண்டுகளாக இயல், இசை, நாடகக் கலைக்கு சேவை செய்த கலைஞர்களின் பங்களிப்பைப் பாராட்டி வழங்கப்படுகிறது. அதன்படி, கடந்த 2021, 2022, 2023 என மூன்று ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதினை தமிழக அரசு அறிவித்துள்ளது.

அடுத்த மாதம் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறும் நிகழ்ச்சியில் இந்த விருதுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அகில இந்திய விருது பெறும் கலை வித்தர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசுத் தொகைக்கான காசோலையுடன், 3 சவரன் எடையுள்ள தங்கப் பதக்கம் வழங்கப்படும். கலைமாமணி விருது பெறும் கலைஞர்களுக்கு 3 சவரன் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் விருதுப் பட்டயம் வழங்கப்படும்.

கே.ஜே.யேசுதாஸுக்கு எம்.எஸ்.சுப்புலட்சுமி விருது: பாரதியார் விருது (இயல்) முனைவர் ந.முருகேச பாண்டியனுக்கும், எம்.எஸ்.சுப்புலட்சுமி விருது (இசை) பத்மபூஷன் டாக்டர் கே.ஜே.யேசுதாஸுக்கும், பாலசரசுவதி விருது (நாட்டியம்) பத்மஸ்ரீ முத்துகண்ணம்மாளுக்கும் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறந்த கலை நிறுவனம் மறும் நாடகக் குழுவுக்கான விருதுகள்: சிறந்த கலை நிறுவனத்துக்கான விருதுக்கு, தமிழ் இசைச் சங்கம், சென்னை (ராஜா அண்ணாமலை மன்றம்) தேர்வு செய்யப்பட்டுள்ளது. சிறந்த நாடகக் குழுவுக்கான விருதுக்கு, கலைமாமணி எம்.ஆர். முத்துசாமி நினைவு நாடக மன்றம், பாலமேடு, மதுரை மாவட்டம் ஆகியன தேர்வு செய்யப்பட்டுள்ளன.

**2021க்கான கலைமாமணி விருது பெறும் கலைஞர்கள் பட்டியல்:**

1. க.திருநாவுக்கரசு எழுத்தாளர்
2. கவிஞர் நெல்லை ஜெயந்தா இயற்றமிழ்க் கவிஞர்
3. எஸ்.சந்திரசேகர் (எ) தங்கம்பட்டர் சமயச் சொற்பொழிவாளர்
4. பாபநாசம் அசோக் ரமணி குரலிசை
5. பா.சற்குருநாதன் ஓதுவார் திருமுறைதேவார இசை
6. டி.ஏ.எஸ்.தக்கேசி தமிழிசைப் பாடகர்
7. திருச்சூர் சி.நரேந்திரன் மிருதங்கம்
8. என்.நரசிம்மன் கோட்டு வாத்தியம்
9. கோ.பில்லப்பன் நாதசுர ஆசிரியர்
10. திருக்காட்டுப்பள்ளி டி.ஜே.சுப்பிரமணியன் நாதசுரம்
11. கல்யாணபுரம் ஜி.சீனிவாசன் நாதசுரம்
12. திருவல்லிக்கேணி கே.சேகர் தவில்
13. நாட்டியம் வழுவூர் எஸ்.பழனியப்பன் பரதநாட்டிய ஆசிரியர்
14. பிரியா கார்த்திகேயன் பரதநாட்டியம்
15. பூச்சி எஸ்.முருகன் நாடக நடிகர்
16. காரைக்குடி நாராயணன் நாடக இயக்குநர்
17. என்.ஏ.அலெக்ஸ் ஆர்மோனியம்
18. எஸ்.ஜே.சூர்யா திரைப்பட நடிகர்
19. சாய் பல்லவி திரைப்பட நடிகை
20. லிங்குசாமி திரைப்பட இயக்குநர்
21. ஜே.கே. (எ) எம்.ஜெயகுமார் திரைப்பட அரங்க அமைப்பாளர்
22. சூப்பர் சுப்பராயன் திரைப்பட சண்டைப் பயிற்சியாளர்
23. பி.கே.கமலேஷ் சின்னத்திரை நடிகர்
24. எம்.பி.விசுவநாதன் இசை நாடக நடிகர்
25. வீர சங்கர் கிராமியப் பாடகர்
26. நா.காமாட்சி பொய்க்கால் குதிரை ஆட்டம்
27. எம்.முனுசாமி பெரியமேளம்
28. பி.மருங்கன் நையாண்டிமேள நாதஸ்வரம்
29. கே.கே.சி.பாலு வள்ளி ஒயில் கும்மி
30. வே.ஜீவானந்தன் ஓவியர்

**2022க்கான கலைமாமணி விருது பெறும் கலைஞர்கள் பட்டியல்:**

1. சாந்தகுமாரி சிவகடாட்சம் எழுத்தாளர்
2. முனைவர் தி.மு.அப்துல்காதர் இலக்கியப் பேச்சாளர்
3. சு.முத்துகணேசன் சமயச் சொற்பொழிவாளர்



4. ஜெயஸ்ரீ வைத்தியநாதன் குரலிசை
5. சாரதா ராகவ் குரலிசை
6. பகலா ராமதாஸ் வயலின்
7. நெய்வேலி ஆர்.நாராயணன் மிருதங்கம்
8. செம்பனார்கோயில் எஸ்.ஜி.ஆர்.எஸ். மோகன்தாஸ் நாதசுரம்
9. சித்துக்காடு டி.ஜி.முருகவேல் நாதசுரம்
10. திருக்கடையூர் டி.ஜி.பாபு தவில்
11. சுசித்ரா பாலசுப்பிரமணியன் கதா காலட்சேபம்
12. அமுதா தண்டபாணி பரதநாட்டிய ஆசிரியர்
13. வி.சுப்பிரமணிய பாகவதர் பாகவத மேளா
14. சுவாமிமலை கே. சுரேஷ் பரதநாட்டியக் குரலிசை
15. பொன் சுந்தரேசன் நாடக நடிகர்
16. கவிஞர் இரா. நன்மாறன் நாடக இயக்குநர்
17. சோலை ராஜேந்திரன் நாடகத் தயாரிப்பாளர்
18. விக்ரம் பிரபு திரைப்பட நடிகர்
19. ஜெயா வி.சி.குகநாதன் திரைப்பட நடிகை
20. விவேகா திரைப்பட பாடலாசிரியர்
21. டைமண்ட் பாபு திரைப்பட செய்தித் தொடர்பாளர்
22. டி.லட்சுமிகாந்தன் திரைப்பட புகைப்படக் கலைஞர்
23. மெட்டிஒலி காயத்ரி சின்னத்திரை நடிகை
24. என்.சத்தியராஜ் இசை நாடக நடிகர்
25. ந.ரஞ்சிதவேல் பொம்மு தேவராட்டம்
26. மு. கலைவாணன் பொம்மலாட்டம்
27. எம்.எஸ்.சி. ராதாரவி தப்பாட்டம்
28. கே.பாலு நையாண்டிமேள நாதஸ்வரம்
29. ஆர்.சாமிநாதன் பண்பாட்டுக் கலை பரப்புனர்
30. கே.லோகநாதன் ஓவியர்

**2023க்கான கலைமாமணி விருது பெறும் கலைஞர்கள் பட்டியல்:**

1. கவிஞர் கே. ஜீவபாரதி இயற்றமிழ்க் கவிஞர்
2. ஆர். காசியப் மகேஷ் குரலிசை
3. ஹேமலதாமணி வீணை
4. வே. பிரபு கிளாரினெட்
5. பி. பி. ரவிச்சந்திரன் நாதசுரம்
6. ஞான நடராஜன் நாதசுரம்
7. எம்.எஸ்.ஆர்.பரமேஸ்வரன் நாதசுரம்
8. ராமஜெயம் பாரதி தவில்
9. பா.ராதாகிருஷ்ணன் தவில்
10. க.தனசுந்தரி பரதநாட்டிய ஆசிரியர்
11. வி.ஜெயப்பிரியா குச்சுப்பிடி நாட்டியம்
12. கே.ஹரிபிரசாத் பரதநாட்டியக் குரலிசை
13. என். ஜோதிகண்ணன் பழம்பெரும் நாடக நடிகர்
14. வானதிகதிர் (எ) பெ.கதிர்வேல் நாடக நடிகர்
15. வி.கே.தேவநாதன் விழிப்புணர்வு நாடக நடிகர்
16. கே.மணிகண்டன் திரைப்பட நடிகர்
17. எம்.ஜார்ஜ் மரியான் திரைப்பட குணச்சித்திர நடிகர்
18. அனிருத் திரைப்பட இசையமைப்பாளர்
19. ஸ்வேதா மோகன் திரைப்பட பின்னணிப் பாடகி
20. சாண்டி (எ) அ. சந்தோஷ்குமார் திரைப்பட நடன இயக்குநர்
21. நிகில் முருகன் திரைப்பட செய்தித் தொடர்பாளர்
22. என்.பி. உமாசங்கர்பாபு சின்னத்திரை நிகழ்ச்சித் தொகுப்பாளர்
23. அழகன் தமிழ்மணி சின்னத்திரை நிகழ்ச்சி தயாரிப்பாளர்
24. ஏ.ஆர்.ஏ. கண்ணன் இசை நாடக நடிகர்
25. ஆர்.எம். தமிழ்ச்செல்வி இசை நாடக நடிகை
26. கே.எம்.ராமநாதன் தெருக்கூத்து
27. டி.ஜெகநாதன் வில்லுப்பாட்டு
28. சி.மகாமணி நையாண்டிமேள தவில்
29. ஆ.சந்திரபுஷ்பம் கிராமியப் பாடல் ஆய்வாளர்
30. சு.தீனதயாளன் சிற்பி

# 2026 சட்டமன்ற தேர்தலை எதிர்பார்த்து கொண்டு இருக்கும் இந்த வேலையில்





# மீண்டும் ஆட்சியை கைப்பற்ற போவது யார்?

வருகிற சட்டமன்ற தேர்தல் 2026 மக்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்புடுத்தியுள்ளது. இதற்கு முன்பு நடந்த எல்லாம் தேர்தல்களிலும் பெரும் கட்சிகளான திமுக மற்றும் அதிமுக ஆகிய இரண்டு கட்சிகளுக்கு இடையேதான் கடும் போட்டி நிலவும் ஆனால் தற்போது புதிதாக தொடங்கப்பட்ட நடிகர் விஜயின் தாவெக கட்சி வரும் தேர்தலில் தனியே களம் காண உள்ளது.

இதனால் பாதிப்பு யாருக்கு, எதனால் என்று பார்ப்போம்

பாஜக அதிமுக கூட்டணி என்பது தமிழக மக்கள் இடத்தில் அதிருப்தியையே ஏற்படுத்தும்.

தமிழகத்தை பொறுத்தவரை பாஜக விற்கு வாக்கு வங்கி என்பது மிகவும் குறைவே என்னதான் தமிழகத்தில் கால் பதிக்க பாஜக வின் முன்னாள் இந்நாள் தலைவர்கள் பாடு பட்டாலும் தனக்கான இடத்தை இன்னும் பாஜக தமிழகத்தில் பிடிக்கவில்லை என்பது தான் நிதர்சனமான உண்மை

அதிமுக கட்சியில் இருக்கும் பிளவுகள் காரணமாக வாக்கு எண்ணிக்கை சரியும். ஊர் கூடி தேர் இழுக்க வேண்டும் என்ற பழமொழி ஏற்ப அந்த கட்சியில் அனைவரும் ஒன்று கூடி வருகிற தேர்தலை சந்திக்க வேண்டும். அது மட்டும் இன்றி பாஜக உடன் கூட்டணியை தவிர்த்து தனித்து நிற்பதே அதிமுக விற்கு பலம். தற்போது கட்சியின் பொதுச் செயலாளராக இருக்கும் எடப்பாடி பழனிச்சாமி கட்சியின் மூத்த நிர்வாகியான செங்கோட்டையனை கட்சியில் இருந்து நீக்கியதினால் அதிமுக மோசமான நிலைக்கு தள்ளப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. எடப்பாடி பழனிச்சாமி தன்னிட்சயாக முடிவுகளை எடுக்கிறாரா? அல்லது அவரை நிர்பந்த படுத்துகிறார்களா?

கட்சியில் முக்கிய முன்னாள்



அமைச்சர்கள் மீது இன்னும் சில வழக்குகள் நிலுவையில் உள்ளதால் பாஜக உடன் கூட்டணி வைத்தே ஆகவேண்டும் என்ற கட்டாயத்தில் கட்சிக்குள் குழப்பங்கள் நிலவுகிறதா?

பல முடிவுகளை தைரியமாக எடுக்கும் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் வருகிற தேர்தலில் கட்சியில் அனைவரையும் ஒன்று திரட்டி வாக்குகள் சிதறாமல் ஒரு நல்ல முடிவை எடுத்து கூட்டணி கட்சிகளாக தேமுதிக, பாமக, போன்ற கட்சிகளுடன் கைகோர்தால் மட்டுமே வெற்றிக்கான வழிகள் பிறக்கும்

ஆளும்கட்சியான திமுக பல ஊழல்களில் சிக்கி இருப்பதாக தமிழகம் வந்த அமித்ஷா திமுக எந்த துறையில் எவ்வளவு ஊழல் என்பதை வெளிப்படையாக தெரியபடித்தியும். திமுக சொன்ன வாக்குறுதிகளை சரியாக செயல்படுத்தாமல் காற்றில் விட்டதையும் . தமிழக மக்கள்



மறந்து விடவில்லை என தெரிவித்தார் அதுமட்டும் இல்லாமல் மின்சார கட்டண உயர்வு சொத்து வரி, தண்ணி வரி, இப்படி பல துறைகளிலும் வரி உயர்த்தியதையும் மக்கள் யாரும் மறந்துவிட முடியாது

விஜயின் தாவெக கட்சி புதிதாக வந்தாலும் இதுவரை இல்லாத அளவிற்கு மக்கள் இடத்தில் நல்ல வரவேற்பு இருக்கத்தான் செய்கிறது. திமுக, அதிமுக ஆகிய இரு கட்சிகள் மீது அதிருப்தியில் இருக்கும் வாக்குகள் அத்தனையும் தாவெக விற்கு செல்லும் அது மட்டும் இன்றி அவரது ரசிகர்கள் சிறியவர் முதல் பெரியவரை உள்ள வாக்குகளை அதிகமாக பெரும் கட்சியாக தாவெக இருக்கும் நிலையில். விஜய் நேர்பட எனக்கும் திமுகவுக்கும் தான் போட்டி என பகிரங்கமாக தெரியப்படுத்தியத்தையும் நினைவில் கொள்ள வேண்டும். எனவே தற்போது உள்ள சூழலில் அதிமுக, தாவெக, தேமுதிக, பாமக, இணைந்து வருகிற தேர்தலை எதிர் கொண்டால் மட்டுமே திமுகவை விழ்த்த முடியும்



அதை தவிர்த்து அதிமுக, பாஜக கூட்டணியிலும் தாவெக தனித்தும் போட்டியிட்டால் என்னதான் ஊழல்கள் செய்தாலும் தனக்கென ஒரு வாக்கு வங்கியை வைத்துள்ள திமுக அதன் கூட்டணி பலத்துடன் கட்டாயம் மீண்டும் ஆட்சியில் அமரும் என்பதில் சந்தேகம் இல்லை. ●

## 6 ஆண்டுகளாக தேர்தலில் போட்டியிடாததால்

# தமிழ்நாட்டில் 42 அரசியல் கட்சிகளின் அங்கீகாரம் ரத்து

## 474 கட்சிகள் மீது தேர்தல் கமிஷன் நடவடிக்கை




தமிழ்நாட்டில் 6 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிடாத 42 அரசியல் கட்சிகளின் அங்கீகாரத்தை ரத்து செய்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 29ஏ விதிகளின் கீழ், நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் அனைத்தும் தலைமை தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்து கொள்கின்றன. தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்த கட்சிகள் தொடர்ந்து ஆறு ஆண்டுகளுக்குள் ஏதேனுமொரு தேர்தலில் போட்டியிட்டிருக்க வேண்டும்.

இந்த அத்தியாவசிய நிபந்தனையை நிறைவேற்ற தவறிய, பதிவு செய்யப்பட்ட, அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளை கண்டறிந்து அவற்றை பட்டியலில் இருந்து நீக்கும் நடவடிக்கையை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் தற்போது, 6 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிடாத 474 அரசியல் கட்சிகளின் பதிவை நீக்கி தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இதில் தமிழ்நாட்டில் 42 கட்சிகள் நீக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து தலைமை தேர்தல் ஆணையம் வெளியிட்ட அறிக்கையில், “ அரசியல் கட்சிகள் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் பிரிவு 29ஏ விதிகளின்கீழ் இந்திய தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகளின்படி, ஒரு கட்சி தொடர்ந்து 6 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிடவில்லை என்றால், அத்தகைய கட்சி பதிவு செய்யப்பட்ட கட்சிகளின் பட்டியலில் இருந்து நீக்கப்படும்.

கடந்த 2019ம் ஆண்டு முதல் 6 ஆண்டுகளாக தொடர்ச்சியாக ஒரு தேர்தலில் கூட போட்டியிடாத பதிவு செய்யப்பட்ட, அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளை அடையாளம் கண்டு பட்டியலில் இருந்து நீக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன்படி முதற்கட்டமாக கடந்த ஆகஸ்ட் 9ம் தேதி நாடு முழுவதும் முதற்கட்டமாக 334 அரசியல் கட்சிகள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டன. தமிழ்நாட்டில் மட்டும் 22 அரசியல் கட்சிகளின் பதிவுகள் நீக்கப்பட்டன.

தற்போது இரண்டாம் கட்டமாக, 6 ஆண்டுகளாக தொடர்ந்து நடந்த தேர்தல்களில் போட்டியிடாத காரணத்தால் செப்டம்பர் 18, 2025ம் தேதி 474 பதிவு செய்யப்பட்ட, அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள் பட்டியலில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளன. இதில் தமிழ்நாட்டில் 42 கட்சிகள் அடங்கும். கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 808 பதிவு செய்த, அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள் பட்டியலில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையை தொடரும் விதமாக, கடந்த மூன்று நிதியாண்டுகளில்(202122, 202223,202324) நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் தங்கள் வருடாந்திர தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை சமர்ப்பிக்க தவறியதற்காகவும், தேர்தல்களில் போட்டியிட்டும் வரவு, செலவு அறிக்கைகளை தாக்கல் செய்யாததற்காகவும் 359 பதிவு செய்யப்பட்ட, அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவை நாடு முழுவதுமுள்ள 23 வெவ்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சார்ந்தவை” என தெரிவிக்கப்பட்டுள்ளது. ●




கிண்டியில் ரூ.23.10 கோடியில் கட்டப்பட்ட புவியியல், சுரங்கத்துறை அலுவலகம் மற்றும் நடிகர் ஜெய்சங்கர், எஸ்.வி.வெங்கட்ராமன் பெயர்களில் சென்னையில் சாலை, தெருக்களின் பெயர்ப் பலகைகளையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் அமைச்சர் எஸ்.ரகுபதி, அனிதா ராதாகிருஷ்ணன், மனோ தங்கராஜ், சென்னை மேயர் ஆர்.பிரியா, இயற்கை வளங்கள் துறை செயலர் சுன்சோங்கம் ஜடக் சிரு, நகராட்சி நிர்வாகத் துறை செயலர் தா.கார்த்திகேயன், மீன்வளம், பால்வளத் துறை செயலர் நா.சுப்பையன், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமர குருபரன் புவியியல் மற்றும் சுரங்கத் துறை இயக்குநர் த.மோகன், ஜெய்சங்கர் மற்றும் எஸ்.வி.சேகர் குடும்பத்தினர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# ரூ.100 கோடி கிளப்பில் இணைந்த சிவகார்த்திகேயனின் “மதராஸி”




ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிப்பில் வெளியான ‘மதராஸி’ திரைப்படம் நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறதுசிவகார்த்திகேயன் மற்றும் ஏ.ஆர். முருகதாஸ் ஆகியோரின் கூட்டணியில் உருவான ‘மதராஸி’ திரைப்படம் திரையரங்குகளில் வெளியாகி மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற பெற்று வருகிறது. வித்யுத் ஜாம்வால் வில்லனாக நடித்திருக்கும் இந்த ஆக்சன் படத்தில் ருக்மணி வசந்த் கதாநாயகியாக நடித்திருக்கிறார்.தயாரிப்பாளர் என்.வி. பிரசாத், ஸ்ரீ லட்சுமி மூவீஸ் சார்பில் தயாரித்துள்ளார், அனிருத் இசையமைத்துள்ளார். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என பல மொழிகளில் ரிலீஸான இப்படம் 3 நாட்களில் உலகம் முழுவதும் ரூ. 65 கோடிக்கும் மேல் வசூல் செய்துள்ளது. இந்த நிலையில், சிவகார்த்திகேயனின் ‘மதராஸி’ படம் உலகளவில் ரூ.100 கோடிக்கு மேல் வசூலித்துள்ளதாக பட தயாரிப்பு நிறுவனம் அறிவித்துள்ளது இப்படத்திற்கு நல்ல விமர்சனங்கள் வந்திருப்பதால் வரும் நாட்களிலும் படத்திற்கான வசூல் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ●

RNI No. TNTAM / 2021 / 85933






“மதராஸி” வெற்றியை கேக் வெட்டி கொண்டாடிய படக்குழு ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிப்பில் வெளியான ‘மதராஸி’ திரைப்படம் நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது. சென்னை, சிவகார்த்திகேயன் மற்றும் ஏ.ஆர். முருகதாஸ் ஆகியோரின் கூட்டணியில் உருவான ‘மதராஸி’ திரைப்படம் திரையரங்குகளில் வெளியாகி மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற வித்யுத் ஜாம்வால் வில்லனாக நடித்திருக்கும் இந்த ஆக்சன் படத்தில் ருக்மணி வசந்த் கதாநாயகியாக நடித்திருக்கிறார். தயாரிப்பாளர் என்.வி. பிரசாத், ஸ்ரீ லட்சு மூவீஸ் சார்பில் தயாரித்துள்ளார், அனிருத் இசையமைத்துள்ளார். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என பல மொழிகளில் ரிலீஸான இப்படம் 3 நாட்களில் உலகம் முழுவதும் ரூ. 65 கோடிக்கும் மேல் வசூல் செய்துள்ளது

இந்நிலையில் படக்குழுவினர் ‘மதராஸி’ படத்தின் வெற்றியை கேக் வெட்டி கொண்டாடி உள்ளனர். அதன்படி சிவகார்த்திகேயன், ஏ.ஆர். முருகதாஸ், அனிருத் ஆகியோர் கேக் வெட்டி தங்களின் வெற்றியை கொண்டாடும் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது.

Printed/Published /Owned by **G. B. PACHAIYAPPAN** Printed at Seaman Graphics at
No 7/253 K.V. N. Puram, 2nd Street, Kilpauk Gardan, Chennai - 600010.
Published at No. E-44 Rajamuthaiyapuram, Raja Annamalaipuram, Mandaiveli, Chennai - 28.
Editor-**G.B. PACHAIYAPPAN** Email : saandrorkural@gmail.com, Mobile:9962235002

# மறைந்த நடிகர் ரோபோ சங்கரின் உடலுக்கு நடிகர் சிவகார்த்திகேயன் அஞ்சலி





சென்னை, சின்னத்திரையில் நகைச்சுவை நிகழ்ச்சிகள் மூலம் பிரபலமாகி வெள்ளித்திரை சினிமாவுக்கு வந்தவர் ரோபோ சங்கர்(வயது 46). காமெடி வேடங்களில் நடித்து ரசிகர்களை கவர்ந்த இவர் விஜய்யுடன் புலி, அஜித்துடன் விஸ்வாசம், தனுசுடன் மாரி, சிவகார்த்திகேயனுடன் வேலைக்காரன் என முன்னணி நடிகர்கள் படங்களிலும் நடித்து தனி ரசிகர் கூட்டத்தை சேர்த்துள்ளார். இதனிடையே, ரோபோ சங்கர் சில வருடங்களுக்கு முன்பு மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். தீவிர சிகிச்சைக்கு பிறகு உடல்நலம் தேறி மீண்டும் படங்களில் நடித்து வந்தார். இந்நிலையில், படப்பிடிப்பில் இருந்த போது அவருக்கு மீண்டும் உடல்நலக்குறைவு ஏற்பட்டு சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில்





சிகிச்சை பெற்று வந்த நிலையில்18 செப்டம்பர் இரவு 09.05 மணியளவில் உயிரிழந்தார். ரோபோ சங்கரின் மறைவு திரை உலகில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தநிலையில், திரை பிரபலமான நடிகர் சிவகார்த்திகேயன் ரோபோ சங்கரின் உடலுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தி அவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். ●


கல்யாண சீர்வரிசை பாத்திரங்கள் மற்றும்
பர்னிச்சர்கள் வாங்க கைராசியான ஸ்தாபனம்
பேக்டரி விலைக்கே கிடைக்கும்
நல்லதே செய்வோம்! துவக்கம் 1983 நல்லதே நடக்கும்!
நிதில் & கோ
35 ஆண்டுகளாக மக்கள் சேவையில்... (கைராசியான ஸ்தாபனம்)
368/2, T.H.ரோடு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை–21. Ph : 044: 2590 0947, 2596 2323